# சுடர்
## CHUDAR

கலை
இலக்கியத்
திங்கள்
இதழ்



மாசி 1979 விலை ரூபா 1-00

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாசகர் [illegible]

## மனநிறைவு அடைகிறேன்

[illegible] மீண்டும் புத்துயிர் பெற்று புதுப் பொலிவுடன் [illegible] நினைக்கும் போது என் மனம் மனநிறைவு அடைகிறது. கதை, கட்டுரை, கவிதை, [illegible] துணுக்குகள் என்பன என் உள்ளத்தை பூரிப்பு அடைய வைக்கின்றன. இந்திய மாத இதழ்களை விட பல மடங்கு உயர்ந்து சுடர் விட்டுப் பிரகாசிக்கும் ஈழத்தின் தலைசிறந்த மாத இதழ் சுடர்.

—ஆ. சிவராஜா, E. 6, இராச தோட்டம், பேராதனை வளாகம்.

## சுடர் வார இதழாக மலர வேண்டும்

"செய்தி அலைகள்" நிச்சயம் நீதி அமைச்சரின் [illegible] உள்ளத்தில் தைத்திருக்கும். இனியாவது திருந்தமாட்டாரா என பொறுத்திருந்து பார்ப்போம்.

இந்திய இலங்கைச் சஞ்சிகையில் ஓர் தமிழ்த் தென்றல் "சுடர்" இதுதான் இன்று ஒரே ஒரு தரமான ஆபாசமில்லாத சஞ்சிகை. இது நிச்சயம் வார இதழாக வாசகர்களின் அமோக ஆதரவுடன் திகழும் காலம் அண்மித்து வருகின்றது.

ஏ. வி. முருகதாசன், கொழும்பு-6.

## சினிமா விமர்சனமும் சேருங்கள்!

சிறுகதைகளும் ஏனையவைகளும் நன்றாக இருந்தன. "இதயம் பேசுகிறது" இதழின் வாசனை நக்கீரனின் மேடையில் வீசுவது போல் தோன்றுகிறது.

தொடர்ச்சியான சுடர் வாசகன் என்ற முறையில் [illegible] நிறைவுகளை கூறும்போது [illegible] [illegible] சுடரிலிருந்து தவறிய வனுவேன். இதில் காணப்படும் [illegible] பெரிய குறை தொடர் கதை ஒன்றும் இல்லாமையாகும்.

அடுத்த சுடருக்கு [illegible] பணிவான வேண்டுகோள் இரண்டு. ஒன்று சுடரில் [illegible] [illegible] சினிமா விமர்சனமும் சேர்க்கப்பட வேண்டும்; [illegible] ஈழத்து தமிழ் [illegible] [illegible] சேர்க்க வேண்டும்.

மற்றது இரண்டாவது வேண்டுகோள் இவ் சுடரின் முன்பக்க அட்டைப்படத்தை அழகாக வெளியிட்டு சிறுகதையாளர்களிடம் அதற்கேற்ற கதையை கோரவேண்டும்.

சுடர் [illegible] தாண்டிலிருந்து புதுப்பொலிவுடன் வெளிவர என் இதய வாழ்த்துக்கள்.

சி. இரவீந்திரா, மட்டுநகர்.

## தரமான 'இலக்கிய ரசிகர்கள்' உருவாக வேண்டும்

தமிழ் நாட்டிலே, கவிதை இலக்கிய வளர்ச்சி பற்றி ஆராய்பவர்கள், பாரதிதாசனது 'குயில்' இதழுக்கு எப்படி ஒரு முக்கியத்துவம் கொடுத்துவருகிறார்களோ, அதே போல, ஈழத்துக் கவிதை இலக்கிய வளர்ச்சி பற்றி [illegible] ஆராயப்போபவர்கள், சுடருக்கு [illegible] ஒரு தனியிடத்தை ஒதுக்க வேண்டும். அந்தளவுக்கு ஈழத்து இலக்கியப் பரப்பிலே, கவிதை வளர்ச்சிக்கு முக்கியத்துவம் கொடுத்து, ஒரு இதழிலே வேறெந்தப் பத்திரிகைகளையும் விட அதிகளவு கவிதைகளை வெளியிடும் சுடரின் சிறப்பு முக்கியத்துவம் [illegible].

வெண்பா [illegible] மரபுத்தமிழ் கவிதை வடிவங்களை [illegible] கவிஞர்களையும், அதே நேரத்தில் [illegible] பிறழ்ந்த— ஆனால் உணர்ச்சிகளைச் சிறப்பாக வெளிப்படுத்து— கின்ற—புதிய கவிதையாக்கத்தில் [illegible] முயற்சியாளர்களையும், [illegible] வெளியிட்டு, கவிதைத்துறைக்கு ஒரு சிறந்த எதிர் காலத்தை உருவாக்க உதவி செய்து வரும் சுடருக்கு நாம்—ஈழத்து இலக்கிய ரசிகர் [illegible] நாம்—என்றும் கடமைப்பாடுடையோம்...

"பொங்கல் [illegible]", "[illegible] பட்டகாலிலே", "அவன் ஒரு பைத்தியம்" என்ற கதைகள் [illegible] கவர்ந்தன. துணுக்குகள், கலையரங்கம், செய்தி அலைகள், நக்கீரனின் மேடை, என்பவை சிறப்பாக இருக்கின்றன. சுடரின் தரம் மேலும் வளரவும், அதன் மூலம், ஒரு தரமான இலக்கிய ரசிகர்களின் [illegible] [illegible] வேண்டுமென்று விரும்புகிறேன்.

[illegible] [illegible], [illegible] குடத்தனை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செய்தி அலைகள்

## முன்னாள் பிரதி அமைச்சரின் உளுத்துப்போன பேச்சு

முன்னாள் பிரதி பாதுகாப்பு அமைச்சரான திரு. லக்ஷ்மன் ஜெயக்கொடி அண்மையில் நடந்த நுகேகொடை பொதுக்கூட்டமொன்றில் உளுத்துப்போன கருத்தொன்றை வெளியிட்டிருக்கிறார்.

“தமிழரின் கடைகளைப் பகிஷ்கரிக்க வேண்டுமென, திருமதி டி. யு. டி. சில்வா கம்பஹா பொதுக்கூட்டத்தில் பேசியதாக பத்திரிகையில் வெளிவந்த செய்தி சம்பந்தமாக விசாரணை செய்யும் இரகசியப் பொலிஸார் தமிழீழம் குறித்து பேசிக்கொண்டிருப்பவர்களை விசாரிக்காதிருப்பது ஏன்”

இதுதான், பொலிஸ்துறைக்குப் பொறுப்பாகவிருந்த முன்னாள் பிரதி அமைச்சரின் பேச்சு.

“தமிழரின் அடிப்படைப் பிரச்சினையான ‘தமிழீழக்கோரிக்கை’ இன்று உலகப்பிரசித்தமானதொன்றாகிவிட்டது. இத்தீர்மானத்தை தமிழர் விடுதலைக் கூட்டணி முற்று முழுதாக எடுப்பதற்கு காரணமாக இருந்ததே கடந்த அரசாங்கத்தின் அரசியலமைப்புத் திட்டந்தான். இதற்கு வேறு சி. ஐ. டி. விசாரணை தேவையா?

தமிழர் கடைகளை பகிஷ்கரிக்கவேண்டும் என்ற பேச்சுக்கும், தமிழீழக்கோரிக்கைக்கும் உள்ள சம்பந்தத்தை முன்னாள் பிரதியமைச்சர் விளக்கியிருந்தால் மிக நன்றாக இருந்திருக்கும்.”

## தமிழீழப் பிரச்சினை இன்று சர்வதேசப்பிரச்சினை

“உலக நாடுகள் பலவற்றில் பலதரப்பட்ட உள்ளூர்ப் பிரச்சினைகள் இருக்கின்றன. ஆனால் நமது நாட்டில் ஈழப்பிரச்சினையைத் தவிர வேறு பிரச்சினைகளே இல்லை” இப்படிப் பேசியிருப்பவர் யார் தெரியுமா? தம்மை காந்தியவாதி என்று பறைசாற்றிக்கொண்டிருக்கும் தர்(ம்)மிஷ்ட ஜனாதிபதியே.

“உள்நாட்டுப் பிரச்சினையாக இருந்த தமிழீழக்கோரிக்கை, இன்று சர்வதேச பிரச்சினையாகவும் மாறிக்கொண்டு வருவதை ஜனாதிபதி இன்னும் அறியவில்லையா? இதனை உணர்ந்துதான் போலும் இந்தியப் பிரதமரும் “விரும்பினால் நான் சமாதானமாக தீர்த்துவைக்கத்தயார்” என்று கூறிவிட்டுப் போயிருக்கிறார்.”

## அடிக்கடி தடுமாறும் நீதி அமைச்சர்

ஐ. தே. கட்சியினர் தேர்தல் காலத்தில் பேசும்போது ‘நாம் ஆட்சிக்கு வந்தால் தரப்படுத்தலை நீக்கிவிடுவோம்” என மேடைக்கு மேடை பிரசாரம் செய்து வந்தார்கள், இதனால்தான் த. வி. கூ. போட்டியிடாத பல தொகுதிகளில் உள்ள தமிழர்கள் ஐ. தே. க. வை ஆதரித்தார்கள். இது அவர்களுக்கும் தெரியும், ஆட்சிக்கு வந்த 3 மாதங்களில் தரப்படுத்தலை நீக்கிவிட்டதாக ‘பெரிதாக’ அறிவித்தார்கள். நீதி அமைச்சரும் ‘தரப்படுத்தலை நீக்கிவிட்டோம்’ என பெருமை பேசி கொக்கரித்தார்.

இன்று இவர் என்ன கூறுகிறார்?

சந்தர்ப்பத்துக்கேற்றாற்போல் அடிக்கடி கருத்தைமாற்றிக்கொள்வதுதான் ‘நீதி’ யா?

## முட்டை ராமரின் பிரசாதமா?

அகில இந்திய கோழி வளர்ப்போர் சங்க தலைவரான பாபுசிங் தனது கோழிப்பண்ணையில் உற்பத்தியாகும் முட்டைகளுக்கு ‘ராம் லட்டு’ என்று பெயர் வைத்திருக்கிறாராம்., ராம் லட்டு என்றால் ‘ராமனின் பிரசாதம் என்று அர்த்தம்.

‘ராம்லட்டு’ பற்றி பத்திரிகைகளிலும் வேறு விளம்பரம் போட்டு வருகிறாராம். அந்த விளம்பரங்களில் “பால் — அசைவ உணவு; முட்டை—சைவ உணவு என காந்தி கூறியிருக்கிறார்” என்று குறிப்பிட்டு வருகிறாராம்.

இதைப் பொறுக்கமுடியாத சதீஷ்குமார் ஜெயின் என்னும் வழக்கறிஞர், இப்போது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவரை நீதிமன்றத்துக்கு இழுத்திருக்கிறார். 'இந்துக்களின் மனதைப் புண்படுத்திவிட்டார்' என்பதே அவர் மீது சுமத்தப்பட்டிருக்கும் குற்றச்சாட்டு.

போயும் போயும் முட்டைக்குப் பெயர் வைக்க ராமர்தானா கிடைத்திருக்கவேண்டும்?

## பாண் - கேக் பேச்சுக்களும் மட்டுநகர் மக்களும்

மட்டக்களப்பை சூருவளி தாக்கி மூன்று மாதங்கள் கடந்துவிட்டன. சும்மா சொல்லக் கூடாது. கடந்த 3 மாதங்களும் நீதி அமைச்சர் சும்மா இருக்கவில்லை. அடிக்கடி மட்டக்களப்புக்கும், கொழும்புக்கும் அலைந்து திரிந்து பத்திரிகைகளுக்கு மிக 'குளிர்மையான' செய்திகளையே கொடுத்துக்கொண்டிருக்கிறார். ஆனால் மக்கள்தான் கூரையில்லாத வீட்டில் இருந்து 'வெயில்' காய்கிறார்கள்.

புயல் நிவாரணக்குழுத் தலைவராக பதவி வகித்துக்கொண்டு அவர் செய்யும் 'சேவை'கள் அளப்பரியன. அவரின் சேவைகளுக்கு உதாரணம் சாராயத்தவறணைகளை மூடி விட்ட சேவைதான்.

"மட்டக்களப்பு மக்கள் குடிகாரர்கள். நிவாரணப் பணத்தைக் கொடுத்தால் குடித்து வீணாக்கிவிடுவார்கள். ஆகவே 6 மாதங்களுக்கு சாராயத்தவறணைகளை மூடிவிடுவேன்" என்று அறிவித்தார்.

ஐயோ பாவம்! 6 நாட்களுக்குகூட அவரால் மூட முடியாமற் போய்விட்டது.

இப்போது கூறுகிறார்: 650 ரூபாவை தர மாட்டேன். 8000 ரூபா பெறுமதியான வீட்டைக் கட்டித்தருவேன்" என்று கேட்கவே இனிப்பாக இருக்கிறது. ஆனால் இது நடைமுறையில் நடக்குமா?

இவரின் பேச்சில் ஐ. தே. க. எம். பி.யான ஜனாப் பரீத் மீராலெப்பைக்கே சந்தேகம் வந்து விட்டது.

"பாண் சாப்பிட வழியில்லாதவர்களிடம் கேக் தருகிறேன் என்ற கதைதான் இது" என்று கூறி அமைச்சரின் முகத்திரையை கிழித்து விட்டார் மட்டக்களப்பின் 2வது உறுப்பினர்.

இப்பேச்சு அமைச்சருக்கு பொறுக்கவில்லைப்போலும். பொதுக்கூட்டம் போட்டு மக்களிடமே கேட்டுவிட்டார். "காசு வேண்டுமா? அல்லது வீடு வேண்டுமா? என்று.

மக்கள் எல்லோரும் 'வீடுதான் வேண்டும்' எனக் கூறிவிட்டார்கள். அதையேதான் எதிர் பார்க்கிறார்கள். 'சாராயத்தவறணைகளை மூடும் தீர்மானம் காற்றில் பறந்ததுபோல் இதுவும் பறந்து விடக்கூடாது' என்றுதான் ஒவ்வொருவரும் முணுமுணுத்துக்கொள்கிறார்கள்

—எஸ். கே. எஸ்—

# அன்றும்—இன்றும்

1. நாலாவதுமாடி விசாரணை நிறுத்தப்படும்.

தமிழ் இளைஞர்கள் நாலாவது மாடிக்கு தொடர்ந்து கொண்டுபோகப்பட்டு விசாரிக்கப்படுகிறார்கள்.

2. ஒவ்வொருவருக்கும் வாரத்தில் 8 இறாத்தல் போஷாக்கு தானியம் வழங்கப்படும்.

ஒரு மாதத்துக்கு ஒரு இறாத்தல் பருப்பு ஒரு குடும்பத்துக்கு வழங்கப்படுகிறது.

3. முதலில் மக்களுக்கு வயிறார உணவு. அப்புறம்தான் அபிவிருத்தி.

முதலில் அபிவிருத்தி — அப்புறம்தான் மற்றவை.

4. தரப்படுத்தல் ஒழிக்கப்படும்.

இனவாரி தரப்படுத்தல் புகுத்தப்பட்டுவிட்டது.

5. பா. உறுப்பினர்களின் துண்டு மூலம் வேலை வழங்குவது ஒழிக்கப்படும்.

பா. உறுப்பினர்கள் கொடுக்கும் வேலை வங்கிப் பாரம் மூலம் வேலை கொடுக்கப்படும்.

6. உற்பத்தி விநியோகம் மக்கள் கையில்

தனியார்துறைக்கு பஸ் சேவை நடத்த அனுமதி.

7. மக்களது வாக்குரிமைக்கு உத்தரவாதம்.

இடைத் தேர்தல்களுக்கு மூடுவிழா.

8. அரசியல் நடவடிக்கைகளுக்கு கட்டுப்பாடு இருக்காது.

ஊர்வலங்களுக்கு நிரந்தர தடை.

9. பொது மக்களுக்கு எதிரான பொலிஸ் இராணுவ தாக்குதலுக்கு முற்றுப்புள்ளி வைக்கப்படும்.

பொலிஸ் இராணுவ தாக்குதல்கள் முன்னை விட மோசம். (சிங்கள மக்கள் விதிவிலக்கு)

10. மூன்று மாதத்தில் வேலையில்லாத் திண்டாட்டம் ஒழிக்கப்படும்.

வேலையற்றோர் தொகை 15 இலட்சம்.

11. விலைவாசி குறைக்கப்படும்.

விலைவாசி ஏற்றம் வானத்தை எட்டிப் பிடித்துவிட்டது.

12. சட்டம், ஒழுங்கு காப்பாற்றப்படும்.

சட்டத்தையும், ஒழுங்கையும் பொலிஸ்—இராணுவத்தினரிடமிருந்து காப்பாற்றவேண்டியிருக்கிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மற்றுமோர் சிவகாமி ஆடுகின்றாள்



செல்வி. லலிதப்பிரியா

அந்த விசாலமான நூலகத்தின் ஒரு கோடியில், ஒவ்வொரு புத்தகத்தின் தலைப்பை வாசிப்பதும் பின் அவற்றை ஒதுக்குவதுமாக இருந்தாள், வீணா. அங்கிருந்த பெருமளவு புத்தகங்களை அவள் புரட்டியாகிவிட்டது. அவள் பார்வைக்காக இன்னும் பத்துப் பதினொரு புத்தகங்கள் அளவில்தான் எஞ்சியிருக்கின்றன. ஏதோ ஓர் புத்தகத்தைத் தேடித் தேடிச் சோர்வடைந்து போன அவளது தளிர்க்கரங்கள் மீண்டும் செயற்பட ஆரம்பிக்கின்றன.

இருந்தாற்போல் அவள் கண்கள் ஏன் இத்தனை அகலமாக விரிகின்றன.....? ஓ! தேடிய புத்தகம் அவள் கரங்களுக்குள் சிறைப்பட்டுவிட்டது போலும்! அவள் முகத்தில்தான் எத்தனை மலர்ச்சி!

அமரர் 'கல்கி'யினது 'சிவகாமியின் சபத'த்தை எடுத்துக் கொண்டு திரும்பியவளின் பார்வை தானாகவே மறுகோடிக்கு நீள்கின்றது. இத்தனை நேரமும் அவளின் செய்கைகள் ஒவ்வொன்றையும், மஞ்சளின் பின்னணியில் சுடர் விட்ட உடல் வனப்பையும் ரசித்தவாறிருந்த மதன்குமாரின் விழிகளை நேருக்கு நேர் சந்தித்த அவளின் கருவண்டு விழிகள் ஒரு கணம் இமைப்பை மறந்து போகின்றன. மறுகணம் ஆற்றாமல் நிலம் நோக்கித் தாழ்கின்றன, கன்னங்களில் குங்குமச் சிவப் பேறுகின்றது. கூடவே அவளது செவ்விய இதழ்களில் புன்னகை ஒன்று கோடிட்டு மறைகின்றது.

அவள் ஒவ்வொரு புதன்கிழமையன்றும் அந்நூலகத்திற்கு வந்து போவதை வழக்கமாகக்கொண்டவளாயினும் சமீப காலமாக இரண்டு மூன்று தடவைகள்தான் அவளை அங்கு கண்டிருக்கின்றான். முதற்பார்வையிலேயே எவரையும் வசீகரித்துக்கொள்ளும் அழகிய கம்பீரமான தோற்றம் அவனுக்கு. சந்தித்துக்கொண்ட அந்த இரண்டு மூன்று சந்தர்ப்பங்களிலும் இருவருமே ஒருவரின் அழகை மற்றவர் வியந்ததோடு இரு உள்ளங்களும் ஒன்றையொன்று நெருங்கவும் முற்பட்டிருந்தன.

இயல்பான கைவீச்சுடன் சிற்றிடை அளவாக அசைய அவள் அங்கிருந்தும் நடந்து சென்ற அந்தப் பின்னழகில் அவன் கிறங்கிப் போனான். அவளது உள்ளத் துள்ளல்தான் நடையிலும் ஒரு துள்ளலை ஏற்படுத்தக்காரணமோ...

வீணா சில நாட்களாகவே உடல் நலமின்றி இருந்தாள். உடலின் ஓரிரு இடங்களில் சிறு சிறு கொப்புளங்கள் போடத் தொடங்கிப் பல இடங்களிலும் போட்டுவிட்டதால் வீட்டினுள்ளேயே அவள் அடைந்துகிடக்க வேண்டியதாயிற்று. அதுவே அவளது தனிமைக்குத் துணை செய்தது 'சிவகாமியின் சபதம்'தான். அந்நாவல் அவளுக்குப் பிடித்துப்போயிருந்ததால் இரண்டாவது தடவையாக வாசித்துக்கொண்டிருந்தவள் தானும் சிவகாமியாகவே மாறினாள்; கண் கலங்கினாள்; உணர்ச்சியோடு ஆடினாள்.

கதையின் முடிவோடு ஒன்றிப்போன வீணா, இன்று நாவலை நூலகத்தில் சேர்ப்பிக்க வேண்டும் என்ற நினைவு வரப்பெற்றவளாய், 'மீனா' என்று தன் சகோதரியை அழைத்தாள்.

இது என்ன... வருவது மீனாவா அல்லது. வீணாவே தானா...? கைதேர்ந்த சிற்பி ஒருவனால் ஒரே அச்சில் தங்கத்தால் வார்த்தெடுத்த இரு சிலைகள் போன்றவர்தானோ இந்தச் சகோதரிகள்! தோற்றந்தான் ஒன்றென்றால் இருவரினதும் நடை, உடை, பாவனைகூடவா ஒன்றாக இருக்க வேண்டும்!

வீணாவும் மீனாவும் இணையாகவே பிறந்தவர்கள். இவர்கள் வேறு சகோதரர்களோடு உடன் பிறந்தவர்களாக இருந்ததால் தாய் இவர்களை வளர்த்த விதமும் ஒன்றாகவே இருந்துவிட்டது. தந்தை ஒரு கலைப்பிரியராதலால் இருவரின் கல்லூரிப் படிப்பு முடிந்த கையோடு மீனாவை வீணைப் பயிற்சியிலும், வீணாவை ஆடற் பயிற்சியிலும் ஈடுபடுத்தி விட்டார்.

'மீனா, சிறு 'ஹெல்ப்' செய்ய வேண்டும். இன்று நீ வீணை வகுப்பிற்குச் செல்லும்போது இதை 'லைப்றறி'யில் சேர்த்துவிட்டு வேறொரு புத்தகம் எடுத்து வந்து தருவாயா?' என்று கேட்டாள் வீணா,

'சரி' என்பதற்கு அறிகுறியாகத் தலையசைத்துவிட்டு அங்கிருந்து அகன்ற மீனா, அன்று மாலை நூலகத்துள் நுழைந்தாள். 'ஏன்டி உஷா! உனக்குத்தான் கதைப் புத்தகங்கள்பற்றி நன்றாகத் தெரியுமே! நல்ல புத்தகமாக ஒன்று எடுத்துத் தாரும்.' என்று கூ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வந்த தோழியை துணைக்கழைத்தாள் அவள்.

அவள் அவ்விதம் கேட்டதால் உண்டான பெருமிதத்தோடு 'வேங்கையின் மைந்த'னை எடுத்துக் கொடுத்த அந்தத் தோழி, 'அகிலனின் கதைகளுள் எனக்கு மிகவும் பிடித்தது இதுதான், மீனா' என்றாள்.

'வீணாவிற்குப் பிடித்திருந்தால் சரிதான்' என்றவாறே அங்கிருந்த சஞ்சிகைகள் சிலவற்றைப் புரட்டத்தொடங்கினாள் மீனா. அப்போது, 'மீனா, இரண்டு கண்கள் உன்னையே பார்த்தபடி இருக்கின்றன.' என்று அவள் காதில் உஷா மெல்லக் கிசுகிசுக்கவே, 'என்ன... என்னையா...?' என்று பார்வையாலேயே கேட்ட மீனா, தோழி ஜாடை காட்டிய பக்கம் திரும்பிப் பார்த்தாள்.

மீனாவை வீணாவென்றே நினைத்திருந்த மதன்குமார், அவள் அங்கே நுழைந்ததிலிருந்து தன்னை ஏறெடுத்துப் பார்க்காமல் இருந்தது கண்டு வேதனைக்குள்ளாகியிருந்தான். முதன் முதலாக தோழி உச்சரித்ததால் அறிந்துகொண்ட அவள் தனக்குள்ளேயே அவன் பல முறை முணுமுணுத்துக் கொண்டான். இப்போது அவள் பார்வை தன் பக்கம் திரும்பியதால் அவன் உதட்டில் மகிழ்ச்சிப் புன்முறுவல் படர்ந்தது. அந்த மகிழ்ச்சி ஒரு வினாடிகூட நிலைக்கவில்லை. 'வெடுக்'கென்று தன் விழிகளை அவள் அகற்றவே, அவன் துணுக்குற்றான்.

'இவளுக்கென்ன... என்றுமில்லாத கோபம் இன்றைக்கு'? முதற் பார்வையிலேயே அவனை அலட்சியப்படுத்திவிட்டாலும் அவளது உள்மனம் 'அவனைப் பார் பார்' என்றதோ என்னவோ? எதேச்சையாகப் பார்ப்பவள் போல் அவனைப் பார்த்தாள். எதையோ பறிகொடுத்தவன் போலிருந்த அவனது முகத்தோற்றம் அவளை என்னவோ செய்தது. 'உஷா, நேரமாகிறது வா, போகலாம்.' என்று தோழியை அழைத்துக் கொண்டு அவள் வெளியேறினாள்.

'அவள் அடக்கமாக மணம் பரப்பும் மனோரஞ்சித மலரல்லவா! அவளாக என்னிடம் வர மாட்டாள். காதலை வெளிப்படுத்த வேண்டிய நானே இன்னமும் வெளிப்படுத்தாமல் இருப்பதால்தான் அவள் இன்று இப்படி நடந்துகொண்டாளோ?' என எண்ணியவாறு அவனும் அங்கிருந்து அகன்றான்.

அடுத்த புதன்கிழமை. வீணா வழமையாக நூலகத்திற்கு வரும் நேரத்தில் அவன் காத்திருந்தான். மீனாவும் வந்து விட்டாள். புத்தகம் ஒன்றைத் தேர்ந்தெடுப்பதில் அவள் ஈடுபட்டிருந்தபோது, இன்று அவளோடு எப்படியும் பேசிவிட வேண்டும் என்ற எண்ணத்தால் உண்டான இன்பக் கிளர்ச்சியோடு அவளை நெருங்கியவன், 'இன்று என்ன புத்தகத்தை எடுத்துக்

# வா நிலா

- செல்வி எம். இந்து -

"சொல்லத் திறமாமோ, சோதியுந்தன் அழகாமே,
மெல்லநீ புகச்செல்லும் மேகம்சிறு வீடாமோ?...
தில்லைச் சிவனார்க்குச் சிறுமகுடச் சிறப்பாக
வில்லை ஒக்கும் உன் வேடம்மிக அழகாமே.

சில்லெனக் குளிர்பரவு முன்மேனி அழகினிலே
வல்லஎன் மதியிழந்து மதியுனக்கே ஈந்திட்டேன்;
புல்லெனப் புரிந்தென்னைப் புதிராட்டம்காட்டி நிதம்
கொல்லாமல் கொல்லுகின்றாய் கொடுமைநின்
விளையாட்டு.

நல்ல ஒளிபரப்பி நளினங்கள் காட்டுகின்றாய்
அல்லதிங் கொளியெந்தன் அழகான இதயத்தில்
செல்லாது தவங்கிடப்பேன் சேயிழையே நீயெந்தன்
இல்லக் கிழத்தியாம் இறங்கி உடன் வந்துவிடு.

மல்லிகை மெத்தையிட்டு, மணிச்சரங்கள்
ஆடவிட்டுப்
பல்லக்கு பார்த்திருக்கு பத்தினியே உன்வரவை
கல்யாணச் சீர்கொள்ளக் கதியில் இறங்கிவரப்
பொல்லாத நாணமோ, அச்சமோ தடையெதுவாம்?

நெல்லின் கதிர்சிரிக்கும் நேரிழையுன் செயல்கண்டு
முல்லைப் பூப்பழித்து முகம் சுருங்கும் உன்செயலால்
நில்லாது செல்லாதே நிதமென்னைத் தனியாக்கி,
துல்லியமாய் பதிலுரைப்பாய் துணிந்தேஉயிர்
துறந்திடுவேன்!"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டு போவதாக உத்தேசம்?' என்றான்.

'ஓ! நீங்களா...?' என்ற முகக் குறிப்போடு, "சித்திரப் பாவை' — 'அகிலன்' எழுதியது." என்றாள் அவள்.

'அது இங்கிருந்தால்தானே உங்கள் கைக்குக் கிடைப்பதற்கு! சற்று முன்னர்தான் நான் அதை எடுத்துக்கொண்டேன். வேண்டுமானால் நீங்கள் இம்முறை கொண்டு செல்லுங்கள்.' என்றவனுக்கு மனதில் ஒரு யோசனை! 'கொண்டு வந்த கடிதத்தைப் புத்தகத்துள் வைத்துவிட்டால் என்ன?'

'உங்களுக்கேன் வீண் சிரமம்? நான் அடுத்த முறை எடுத்துக்கொள்கிறேன்.'

'பரவாயில்லை; நீங்களே கொண்டு போங்கள்' என்றவன் புத்தகத்தை எடுத்து வந்து அவளிடம் நீட்டினான்.

'தாங்ஸ்' என்றவாறு அதைப் பெற்றுக்கொண்டு இளநகை பூத்தவள் சிறுபொழுது அங்கு தங்கிவிட்டு அகன்றாள்.

மீனா கொண்டு வந்த புத்தகத்தை எடுப்பதற்காக அவளின் அறையுள் நுழைந்த வீணா, ஒரு கடிதத்தோடு வெளிப்பட்டாள். 'உனக்கு இந்த 'லவ் லெட்டரை' வரைந்த மதன்குமார் யார்?' என்று மீனாவை கேட்டாள். மீனாவோ ஒன்றும் புரியாமல் கடிதத்தைப் பறித்துப் பார்த்தாள். எந்தவோர் இளைஞனோடும் தான் நெருங்கிப் பழகாதிருந்தும் தனக்கு அந்த கடிதத்தை வரைந்தது யாராக இருக்கும் என்று சிந்தித்துப் பார்த்தவள் மனதில் மின்னலைப்போல் ஓர் எண்ணம் தோன்றி மறைந்தது. " 'லைப்றறி'யில் சந்தித்தவராக இருப்பாரோ...?"

'அவரை எனக்கு நன்கு பழக்கமில்லை. ஆயினும் என்னை விரும்புகிறார் என்பது தெரியும். தான் விரும்புவதைக் கடிதத்தில் எழுதி எனக்குத் தெரியாமலேயே புத்தகத்துள் வைத்துவிட்டார் போலிருக்கிறது, வீணா!'

'தன்னை ஒருவர் விரும்புவது போலவே மீனாவையும் ஒருவர் விரும்புகிறார்' என்று தான் வீணா நினைத்தாள். அந்த இருவருமே ஒரே நபர்தான் என்பதை அவளால் எப்படி உணர முடியும்?

வீணா உடல் தேறியதன் பிறகு நான்கைந்து தடவைகள் நூலகத்திற்குப் போய் வந்து விட்டாள். அவளுக்குத் தான் எவ்வளவு பெரிய ஏமாற்றம்! ஒரு தடவையாவது அவளால் மதன்குமாரைச் சந்திக்கவே முடியவில்லை!

'முதற் சந்திப்பிலிருந்தே நான் வரும் நேரத்தில் எனக்காகக் காத்திருப்பாரே! இப்போது என்னைக் காத்திருக்க வைத்துவிட்டு அவர் எங்கு போய்விட்டார்? ஒருவேளை, ஒரு மாதமாக என்னைக் காணாத ஏமாற்றத்தால்தான் வராமலே இருக்கின்றாரோ?'— கேள்விக்கு விடை காண முடியாமல் அவள் உள்ளம் உடைந்துபோய்க் கிடந்தது.

'இன்று வருவார்' அடுத்த கிழமை வருவார்' என்று ஒவ்வொரு தடவையும் நம்பிக்கையோடு வருவாள். திரும்பும் போது ஏமாற்றத்தை நெஞ்சில் சுமந்துகொண்டு செல்வாள்.

அன்றும் அவனைக் காணாதவளாய் சிலையாகச் சமைந்திருந்தாள், வீணா. திடீரென்று அங்கு பிரவேசித்தான் மதன்குமார். எதேச்சையாக அவளைக் கண்டுவிட்ட அவன் அவளை நெருங்கி, 'என்ன, இந்தப்பக்கம் வரமாட்டேன் என்று கூறிவிட்டு இன்று வந்திருக்கிறாயே, அதிசயமாக இருக்கிறது!' என்றான்.

அவனைக் கண்டதால் உவகையால் துள்ளிய அவள் உள்ளம் அவன் கூறியவற்றால் அதிர்ச்சியடைந்தது. 'இவர் என்ன சொல்கிறார்? வாய் திறந்து ஒரு வார்த்தைகூட இவரோடு பேசியதில்லையே!'— இவ்வாறு மனதிற்குள் நினைத்தவள், 'வரவேண்டும்போல் இருந்தது. அதனால் வந்தேன், நீங்கள் இப்போது இங்கே வருவதில்லையா?' என்று அடக்க முடியாத ஆவலோடு கேட்டாள்.

'உன்னைச் சந்திப்பதற்காகவே முன்னர் குறிப்பிட்ட நேரத்தில் வந்து போய்க்

தீபேத்தில் யாராவது உறவினரோ
விருந்தினரோ வீட்டுக்கு வந்தால்
அவர்களை வரவேற்கும் முறை
மிக விசித்திரமானது. நாக்கை
தொங்கப் போட்டுக்கொண்டு
தலையை ஆட்டுவார்களாம்.
அன்பான வரவேற்புக்கு
அதுவே அடையாளமாம்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சோவியத் யூனியனில்

அழகுக்கு முக்கியத்துவம் கொடுப்பது ஆணா பெண்ணா என்று கேட்டால், அதன் பதில்: நிச்சயமாக ஆண்கள் தான்.

ஆனால் கல்யாணத்துக்கு அவசரப்படுகிறவர்கள் யார் என்று கேட்டால் அதற்குரிய பதில் 'பெண்கள்தான்!

சமீபத்தில் சோவியத் யூனியனில் ஸிம்ரபோல் என்ற நகரில் 1000 ஆண் பெண்களிடையே ஓர் ஆராய்ச்சி நடத்தப்பட்டது. வருங்கால வாழ்க்கைத் துணை குறித்து இவர்களிடம் சில கேள்விகள் கேட்கப்பட்டன. அதன் மூலம் பல சுவையான தகவல்கள் வெளியாகின.

சோவியத் யூனியனில் பொதுவாக படிக்கும் போதோ, அலுவலகங்களில் வேலைசெய்யும் போதோ ஒருவருடன் ஒருவர் பழகி குணங்களைப் புரிந்துகொண்டு காதலித்து ஆணும் பெண்ணும் திருமணம் செய்து கொள்கிறார்கள். அங்கு அந்தஸ்து, பணம், சாதி, மதம், ஜாதகம் ஆகியவை எதுவும் திருமணத்துக்கு முட்டுக்கட்டையாக இருப்பதில்லை.

---

கொண்டிருந்தேன். இப்போது தான் அதற்கு அவசியமில்லையே! வாரத்தில் ஒரு தடவை நாம் வெளியிலேயே சந்தித்துக்கொள்கிறோம். நினைத்த போது இங்கு வந்து போகிறேன்.'—கண்களைச் சிமிட்டியபடியே அவன் கூறியது கேட்டு அவளுக்குத் தலை சுழன்றது.

அவனுக்கு மீனா, வீணாவாகி விட்டாள் என்ற உண்மையை உணர்ந்த அவள் உள்ளம் புழுவாய்த் துடித்தது. அங்கிருந்து எப்படி வெளியேறினாள், எப்படி வீடு வந்து சேர்ந்தாள் என்று அவளுக்கே தெரியாது.

வெளியே இருள் கவியத் தொடங்கியிருந்தது. அவளோ தன் வாழ்வே இருண்டுவிட்டதாக நினைத்தாள்.

அடக்கி வைத்த துயரம் எரிமலையாய்வெடிக்க, இருளின் போர்வையுள் அவள் அழுதவாறிருந்தாள்.

மறுநாள். மதன்குமாரையும், மீனாவையும், தன்னையும் பற்றிய நினைவுகளிலே வீணாவின் மனம் சுற்றிச் சுழன்றதால் ஆடல் வகுப்பில் அவளால் சரியாகவே ஆடமுடியவில்லை. தலை வலிக்கின்றதென்று ஆடலாசிரியையிடம் கூறிவிட்டு வீதியில் இறங்கி நடந்தாள். மீனாவின் வாழ்க்கையோடு அவள் போட்டி போடத் தயாராக இல்லை. தன் வாழ்க்கை எப்படி அமையுமென்று அவளுக்குத் தெரியவில்லை.

வீட்டை அடைந்து உடைமாற்றிக் கொண்டு தனது 'டயறி'யை எடுத்து அதில் எதையோ எழுதத் தொடங்கினாள். எழுதிக்கொண்டிருந்தவள் அப்படியே மேசையில் முகத்தைக் கவிழ்த்தாள்.

அவளின் அறைப்பக்கமாக வந்த மீனா, வீணாவின் முதுகு ஏறியிறங்குவதைக் கண்டு திடுக்குற்றவளாக மெதுவாக வந்து அவளின் பின்னே நின்றாள். பின்னர், வந்த சுவடு தெரியாமல் அறையிலிருந்து வெளியேறினாள்.

ஒரு ஆணும் ஒரு பெண்ணும் ஒருவரோடு ஒருவர் நன்கு பழகி அவரவர் கருத்துக்களை உணர்ந்ததன் பின் ஏற்படும் அன்பில்தான் அர்த்தமுள்ளதென்று நினைப்பவள் மீனா. மதன்குமாரின் கண்ணியமான, நேர்மையான, காதலை சில தினங்களின் முன்தான் அவள் ஏற்றிருந்தாள். பெற்றோர் யாழ்ப்பாணத்திலுள்ள உறவினர் ஒருவரது திருமணத்திற்குச் செல்லவிருந்ததை ஒரு சந்தர்ப்பமாகப் பயன்படுத்தி அவனை வீணாவிற்கு அறிமுகம் செய்து வைப்பதற்காக இரண்டு தினங்களுக்கு முன் அவனைத் தன் வீட்டிற்கு அழைத்திருந்தாள் அவள். வீணாவாலேயே தனக்கு அறிமுகமான அவனை அவளுக்கே அறிமுகம் செய்யத் துணிந்த தன்னை, தானே நொந்து கொண்டாள், மீனா.

அடுத்த நாளும் விடிந்தது. மதன்குமார் வரப்போகும் அந்த மாலை நேரமும் நெருங்கிக்கொண்டிருந்தது. வீணா எங்கோ வெளியில் செல்வதற்குத் தயாராக வெளிக்கிடுவதை மீனா கண்டாள். வழக்கத்திற்கு மாறாக வீணா நேர்வகிடு எடுத்திருந்தாள். அவள் போவதையே வெறித்துப் பார்த்தபடி அமர்ந்திருந்த மீனா பல நிமிடங்களுக்குப் பிறகு கதவு தட்டப்படும் சத்தம் கேட்டு வாசலுக்கு விரைந்தாள். அவன் நின்றிருந்தான்.

'வாருங்கள்' என்று தன்னை வரவேற்றவள் சுட்டிக்காட்டிய சோபா ஒன்றில் அவன் அமர்ந்துகொண்டான்.

அவளின் முகம் களையிழந்திருப்பதாக மதன்குமாருக்குத் தோன்றவே வெளிப்படையாக அவளிடம் அதைக் குறிப்பிட்டான். மீனா விரக்தியாகச் சிரித்தாள். 'நாம் நினைப்பது எதுதான் நடக்கிறது? எதிர்பாராதவை நடப்பதுதான் அதிகம். உள்ளத்தால் உங்களோடு இணைந்தும் உடலால் இணைய முடியாத நிலைக்கு நான் தள்ளப்பட்டுவிட்டேன். என் தந்தை தனது நண்பர் ஒருவரின் மகனுக்கு என்னை மணம் செய்து வைக்கத் தீர்மானித்துவிட்டார். அவர் போட்டுவிட்ட கோட்டைக் கடக்கவும் துணிவு எனக்கில்லை. என்னை மன்னித்து, மறந்துவிடுங்கள்!'—விம்மினாள் அவள். நடந்த உண்மையை வெளியிட்டால் தனது பேதமையை எண்ணி வாழ்நாள் பூராவும் வருந்த நேரிடும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்றும், அவனிடமிருந்து நினைத்தே அவள் அவ்வாறு
தான் விலகுவதால் வீணாவினால் பொய் கூறினாள்.
அவன் கவரப்படலாம் என்றும்



'மறந்துவிடுங்கள் என்று சுலபமாகச் சொல்லி விட்டாயே! என்னால் மறக்க முடியுமா என்று உன் நெஞ்சையே கேட்டுப்பார்! கனிந்த காதல் உண்மையென்றால் நாம் சேர்ந்து வாழவா வழியில்லை? சொல், மீனா!' — ஆத்திரத்தோடும், ஆக்ரோஷத்தோடும் அவளை நெருங்கி அவள் தோள்களைப் பற்றி உலுக்கியவன், திடீரென வெறிபிடித்தவன் போல் அவள் நெற்றி, கண்கள், கன்னங்கள்—என்று தன் வெம்மையான இதழ்களைப் பதிக்கவே, இதுவரை தன்னைத் தீண்டியறியாதவனின் இந்த அத்துமீறிய செய்கையால் ஒரு கணம் செயலிழந்த மீனா, மறு கணம் தன்னை அவனிடமிருந்து பறித்துக்கொள்ளப் போராடினாள்.

அதே நேரம், தன்னோடு மதன்குமார் உரையாடிய அன்று அவள் மூலமே அவன் தன் வீட்டிற்கு வரவிருந்த நேரத்தை அறிந்து, அந்நேரம் தானிருக்கக் கூடாது என்று வெளியே சென்று விட்டு, இருட்டுமுன் திரும்பிய பின்னும் அவன் உள்ளே இருப்பதை உணர்ந்து, தன்னை மறைத்துக்கொண்டு உள்ளே நடப்பவைகளைக் கவனித்தவாறிருந்த வீணா, மேலும் அங்கே தாமதிகக விருப்பமில்லாமல், 'மீனா' எனப் பதறியவாறு உள்ளே நுழைந்தாள்.

மூன்றாம் குரலால் சுய நிலைக்குத் திரும்பிய மதன் குமாரின் பிடியிலிருந்து மீனா விடுபட்டாள். அவளையும் வீணாவையும் அவன் மாறிமாறிப் பார்த்தான். மீனாதான் இரண்டு உருவங்களாகத் தோன்றுகிறாளா? இல்லை—— இல்லை—— இவள் நேர்வகிடு அல்லவா எடுத்திருக்கிறாள். இவள்தான் மீனாவின் சகோதரியோ?' — இவ்வளவையும் ஐந்தே விநாடிகளில் ஊகித்தவன் குற்ற உணர்வினால் 'சரே'லென அங்கிருந்து வெளியேறினான்.

தனக்குண்டான அவமானத்தால் குன்றிப்போன உடலோடு நின்றிருந்த மீனாவை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முடிவினைக் காண்பதில்லையோ?



அப்பரும் சுந்தரரும் ஆளுடைய பிள்ளைகளும்
அரவணைத்து காத்த தமிழே
இப்புவி பிறந்த போதும் இன்னலை
தொடர்ந்த போதும்
இனிமையைக் கொண்ட மகளே
சுப்பிரமணியனின் சுந்தர அழகிற்கு
சுவைகூட்ட வந்த நிலவே
எப்பிறவி எடுத்தாலும் என்னுடலை அழித்தாலும்
எழுதுவேன் பாடல் தினமே

புத்தனின் போதனை புலியிடம் போனதை
இத்தரை கண்டு விட்டோம்
சித்திரவதையிலும் சிந்தனைத் தெளிவினால்
இத்தரை வாழுகின்றோம்
பத்தரை மாற்று நம்தாய் மொழித்தமிழினை
தரணியில் வாழ வைப்போம்
செத்து நாம் மடியினும் செந்தழல் வருகையால்
செங்கதிர் காணவைப்போம்.

திறமைகள் என்பது பெரும்பான்மை என்றொரு
தத்துவக்கவிதை சொன்னார்
உறவுகள் என்பதும் பிரிவுகள் என்பதும்
எங்களின் உரிமை என்றார்
பெரும்பான்மை என்பது பெம்மாத்து
— கொண்டது
பேடிகள் கொண்ட குணமே
சிறுபான்மை நம்இனம் செத்து மடியினும்
உருவாகும் நல்ல நிலையே.

உருவாகும் ஓர்நிலை உள்ளத்தில் உள்ளது
உள்ளங்கள் திரண்ட போது
கருவாகும் இந்நிலை கண்களில் தெரியுது
நெஞ்சங்கள் நிமிர்ந்த போது
கருவாகி உருவாகி காலக்கிரமத்தில்
கனியாகி வந்த போது
நிறைவான நம்மினம் நிலையானவாழ்வினை
வாழ்த்துவோம் கவிதை பாடி.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மானிடர் தம்மையே மன்னர்கள் என்று நான்
மாகவி பாடி வைத்தான்
மாகவி பாட்டினில் மானிட தத்துவம்
வாழ்ந்திட வாழ்த்து சொன்னான்
மானிட தத்துவம் மானிலம் வாழ்ந்திட
மனதிலே அன்பு வேண்டும்
மக்களது உள்ளத்தில் அன்பது தோன்றிடின்
மகிழ்ச்சியால் உலகு தோன்றும்.

ஐக்கியப் பட்டு நாம் ஆட்சி புரிந்திட
அன்பு கொள் ஆட்சியில்லையே
ஐக்கியம் பேசலும் அன்பினைக் கேட்டலும்
இங்கு வாழ் அடிமை நிலையே
முக்கியம் முக்கியம் முத்தமிழ் வாழ்தலே
முடிவினைக் காண்பதில்லையோ
இந்நிலை மீட்சியை இன்நிலமீட்சியால்
ஈட்டுவோம் எழுதுக மனமே.

— எஸ். நவநீதன்



அணைத்து, 'இப்போது சொல்! அவரால் கறைபட்ட இந்த உடலோடு கற்பனைக் கணவருடன் வாழப்போகிறாயா?' எனக்கேட்டாள் வீணா.

அவளின் சீண்டலால் நெகிழ்ந்த மீனா, 'உன்னை வாழ வைக்க நினைத்து இப்படியாகி விட்டது?' என்றாள்.

வீணா துணுக்குற்றாள். மீனா, 'உனக்கெப்படி—' என்று கேட்க முயன்றவளை இடைமறித்து 'நேற்று நீ அழுது கொண்டிருந்த போது உனது 'டயறி'யை வாசிக்கவேண்டியதாயிற்று' எனக்கூறி அழுதாள் மீனா.

'மீனா, ஆரம்பத்தில் அவர் என்னைத்தான் விரும்பியிருந்தாலும் காதலைப் பரிமாறிப் பழகியது என்னுடன் இல்லையே. நீயே அவருக்கு உரியவளாகிவிட்டாய்! அவரைப் பொறுத்தவரையில் தன்னால் விரும்பப்பட்டவள், விரும்பப்படுகின்றவள்—எல்லாம் நீயாகவே இருக்கட்டும். நடந்த உண்மை நமக்குள்ளேயே இருக்கட்டும். நான் அவரை மறக்க முயல்கிறேன். காலப் போக்கில் வேறொருவருக்கு நான் உடைமையாகலாம். போய் உன்னை சீர்படுத்திக் கொள்.'

பலாலி விமான நிலையத்தில் இந்தியாவிற்குப் புறப்படும் விமானம் தயாராக நிற்கின்றது.

தன் பெற்றோர்களிடம் விடை பெறுகின்றாள், வீணா. சில அடி தூரங்கள் தள்ளி புதுமணத் தம்பதிகளாக நிற்கும் 'மதன்குமார்—மீனா' இருவரிடமும் வருகின்றாள். 'இந்தியாவிலேயே உன் அரங்கேற்றத்தை வைத்துவிடாதே! அது இங்குதான் நடக்கவேண்டும்!' என்கிறாள் மீனா. அவள் கண்கள் கலங்கியிருக்கின்றன. 'வருகிறேன், மீனா.' என்ற வீணா மதன்குமாரிடம் பார்வையாலேயே விடைபெற்று விமானத்தை நோக்கி நடக்கிறாள்.

விமானம் மேலே மேலே பறக்கின்றது. அதில் அமர்ந்திருந்த வீணா, மீனாவிடம் அன்று தான் கடைசியாகக் கூறிய வார்த்தைகளை நினைத்துப்பார்த்து தனக்குள் சிரித்துக்கொள்கிறாள். 'அவரைக் காதலித்த எனக்கு மறுவாழ்வா—?'

இதோ இந்தியாவின் ஒரு மூலையில் வீணாவின் ஐந்தாவது அரங்கேற்றம் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

'சிவகாமியின் சபத'த்தின் கதாநாயகி சிவகாமி வகுத்த கலைப்பாதையிலேயே தானும் நடக்கவேண்டியிருக்கும் என்று அன்று அவள் எதிர்பார்த்திருக்கமாட்டாள்.

சிவகாமி தன் காதல் கைகூடாதபோது மனக்கோயிலிலிருந்தும் மாமல்லரை அகற்றி அங்கு ஏகாம்பரநாதரையே பதியாக வரித்துக்கொண்டு பக்தி நிலையில் ஆடினாள். ஆனால் இவளோ, உள்ளத்தில் மலர்ந்த மென்மையான காதல் மலர் என்றும் வாடா மலராக நின்று இதமான மணம் பரப்ப, சிவகாமி ஆடிய நடராஜப்பெருமானின் ஆனந்த நடனத்தைப் பற்றிய அதே அப்பரின் பாடலுக்கு அபிநயம் பிடித்து மற்றுமோர் சிவகாமியாக ஆடுகின்றாள்.

(யாவும் கற்பனை)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாலடியார் காட்டும் பாதை

க. கலைமோகன்

"இனிய உளவாக இன்னாத கூறல்
கனியிருப்பக் காய்கவர்ந் தற்று"

இதுபோலவே நல்லவழி இருக்கும் போது முள்ளும், கல்லும், மண்ணும் நிறைந்த வழிகளை நாடுவது தவிர்க்கப்பட வேண்டும். நல்ல பாதையை நாடும் போது நன்மை நம்மை நாடியும், தீய பாதைகளை நாடும் போது தீமை நமை நோக்கி ஓடியும் வந்து சேர்கின்றன. மனித சமூகத்திற்குப் பொருத்தமான நன்மையை அளிக்கக் கூடிய பல நல்ல பாதைகள், தமிழர் தம் பண்டைத் தமிழிலக்கியங்களில் வகுக்கப்பட்டுள்ளன.

அவைகளிற் தலைசிறந்தவை 'பதினெண் கீழ்க்கணக்கு' என்னும் பெரும் பிரிவுக்குள் அடக்கப்பட்டுள்ளன,

நல்ல வழிகளை நாடுவோர் குறைவாகவே காணப்படுகின்றனர். காரணம்-

பாதைகளில் தடங்கல்கள் ஏதோ இருக்கின்றன என்பதற்காகவல்ல.

பாதசாரிகளின் அகக்கண்கள் மூடப்பட்டிருப்பதேயாகும். பதினெண் கீழ்க்கணக்குப் பிரிவுக்குள் அடங்கியுள்ள காதைகளில் ஒன்று தான், 'நாலடிப்பாதை'.

இந்தப் பாதை திருக்குறள் பாதைக்கு அடுத்தபடியாகச் சிறந்த பாதை எனத் தமிழறிஞர்களாற் கூறப்படுகின்றது. பாதை மட்டும் தெரிகின்றது. ஆனால் பாதையை உருவாக்கித் தந்த புலவர் பெருமகனாரின் பெயரை எவரும் இது கால வரை அறிந்திலர்.

பெயரை கூடப் பிரபல்யப் படுத்தாத புலவரின் பெருந்தன்மைதான் என்னே!

வாழ்க! புலவர் பெருந்தகையின் பெருந்தன்மை.

அவர் காட்டிய நாலடிப் பாதைகளிற் சிலவற்றைக் கீழே காட்டுகின்றேன். காண்க.

பழி வாங்கும் சுபாவம்.

இது மனித சமூகத்தோடு இரண்டற, உடன் பிறப்பாக ஒட்டிக்கிடக்கின்றது.

சமூகத்தின் சீரழிவிற்கு இவைகளும் காரணமாகும்.

ஒருவன் இன்னொருவனுக்கு துன்பகாலத்தில் உதவி செய்கின்றான். உதவியைப் பெற்றவன் சில நாட்கழிந்து உதவியைத் தந்தவனுக்கே தீங்கு செய்கின்றான்.

அப்படித் தீங்கு செய்ய வருகின்றவனுக்கும் நன்மையைச் செய்வதே மேலோர்களின் பண்பு என்று 'நாலடியார்' கூறுகின்றது.

மேற்காட்டிய பொருள் பொதிந்த செய்யுள் இதோ:

"உபகாரம் செய்ததனை ஓராதே தங்கண்
அபகாரம் ஆற்றச் செயினும் – உபகாரம்
தாம்செய்வ தல்லால் தவற்றினால் தீங்கூக்கல்
வான்தோய் குடிப்பிறந்தார்க் கில்"

*　　*　　*

மாற்றான் மனைவியை விரும்பும் செயல், செயல்களிலெல்லாம் இழிவான செயல்.

---

## உள்ளே விட மாட்டேன்!

ஐஸ்லாந்திலுள்ள ஒரு சிறைச்சாலையில் கைதிகளை தினமும் காலை வேளை வெளியே அனுப்புவார்கள். உழவர்களுடன் அவர்கள் நிலத்தில் வேலை செய்து விட்டு இரவுக்குள் திரும்பிவிட வேண்டும். ஒருமுறை ஒரு கைதி நள்ளிரவில் திரும்பினார். அதைப் பார்த்துக் கோபமுற்ற சிறைச்சாலை வார்டன் கத்தினார் "அடுத்தமுறை நீ இப்படித் தாமதமாக வந்தால் உள்ளே விடமாட்டேன், ஜாக்கிரதை"

அனுப்பியவர்: செல்வன் கே. சதீஷ்குமார்,
கிரான் (கி.மா)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிதம்பரனாரின் சிறைவாழ்வு

ஆங்கில ஏகாதிபத்தியத்தை எதிர்த்து போர்க்குரல் எழுப்பியவர் வ.உ.சி. அவர்களாவார். வழக்கறிஞராக விருந்து உரிமைக்காகக் குரல் கொடுத்து சிறைக்குச் சென்ற செந்தமிழ் வீரர் சிதம்பரனார். வெள்ளையர் மேல் வெறுப்பை ஊட்டினார் என்றும் அடிமைத் தளையை அறுக்க வழி காட்டினார் என்றும் சாட்டினார் வெள்ளைக்காரர் அவர் மீது அடுக்கடுக்காகக் குற்றச் சாட்டுக்களை; குற்றம் சாட்டிய ஏகாதிபத்திய வெள்ளையரே நீதிபதியாகவிருந்து அவர் மீது சுமத்தப்பட்ட குற்றச் சாட்டுக்களை விசாரித்தனர். குற்றம் சாட்டியோரே நீதிபதியாகவிருந்து வழக்கை விசாரிக்கும் விந்தைகளை விடுதலைக்குப் போராடிய நாடுகள் பலவற்றின் வரலாற்றிலே காணலாம். இதற்கு பாரத நாடும் விதிவிலக்கல்ல. விசாரணையின் விளைவு சிதம்பரனார் குற்றவாளியாக்கப்பட்டார். கூண்டிலே அடைக்கப்பட்டார்: தமது சிறைவாழ்வு பற்றி சிதம்பரனார் பின்வருமாறு கூறினார்!

"சிறைச்சாலையில் செக்கிழுத்த துயரத்தை மாற்றியது என் செந்தமிழன்றோ? கைத்தோல் உரியக் கல்லுடைக்கும் போது என் கண்ணீரை மாற்றியது கன்னித்தமிழன்றோ? சிறைக் கோட்டத்தில் வேலை ஒழிந்த வேளையில் தொல்காப்பியத்தைப் படித்துப் படித்து என் தொல்லையெல்லாம் மறந்தேன். வள்ளுவர் குறளைப் படித்து உள்ளம் தழைத்தேன்! பாரதநாடு என்றும் விடுதலை என்றும் பாடுபடும் என்னை சிறைக் கோட்டத்தில் அடைத்து சித்திரவதை செய்யலாம். துச்சமாக மதித்து நூறுகள் நூறு செய்யலாம்; ஆனால் நாட்டிலே புறப்பட்டு விட்ட வீரவிடுதலை வெள்ளத்தையோ அதன் வேகத்தையோ தணிக்க இனியாரால் முடியும்? எரிமலையை தடுக்க அதன் வாயை அடக்க இனி எவரால் முடியும்?"

சிதம்பரனாரின் இந்த செந்தமிழ்த் தேன் துளிகள் அக்கிரமங்களுக்கு எதிராக உக்கிரமாய்ப் போராடும் விடுதலை வீரர்களுக்கு ஊக்கிகளேயாகும்.

தகவல்: பொன். பூலோகசிங்கம்

---

இதனை 'நாலடியார்' கடுமையாக இடித்துரைத்துள்ளது. இதற்காக "பிறர்மனை நயவாமை" என்னும் அதிகாரமே நாலடியாரில் ஒதுக்கப்பட்டுள்ளது.

பிறன் மனைவியை நாடிச் செல்பவனுக்கு நடக்கும் வரவேற்புகள் எவை எவை தெரியுமா?

அவன் புகுவது அயலார்க்குத் தெரிந்தால், அவனது குடியின் சிறப்பு அழியும்.

அதையும் மீறிப் புகுந்து இன்பம் துய்த்துக் கொண்டிருக்கையில் அகப்பட்டால் கால் ஒடியும்.

ஆண்மையற்ற இந்தச் செயலை செய்யும் போது, நெஞ்சில் அச்ச உணர்வுகளே நிறைந்து நிற்கும்.

இவ்வளவு இழிவையும் தரும் செயலில் இன்பம் எப்படி இருக்க முடியும்?

நாலடியாரும் இதையே சொல்லுகின்றது.

"காணின் குடிப்பழியும், கையுறின்
கால்குறையும்
ஆணின்மை செய்யுங்கால் அச்சமாம்—
நீள்நிரயத்
துன்பம் பயக்குமால் துச்சாரி; நீ கண்ட
இன்பம் எனக்கெனைத்தால் கூறு"

*　　*　　*

அழகு என்றால் என்ன?

அழகு என்பது அழகாக உடை உடுத்தித் திரிவதா? அல்லது முடியை நீளமாக வளர்த்தலா?

அரிவையர்கள், தம் வதனங்களில் மஞ்சள் அரைத்து பூசுதல் உண்மையான அழகா?

அப்படியாயின் எதுதான் உண்மையான அழகு?

இதோ! அதற்குரிய பதிலை 'நாலடியாரே' கூறுகின்றது.

"குஞ்சி யழகும் கொடுந்தானைக் கோட்டழகும்
மஞ்ச ளழகும் அழகல்ல—நெஞ்சத்து
நல்லம்யாம் என்னும் நடுவு நிலைமையால்
கல்வி யழகே அழகு"

*　　*　　*

விளக்கினுள் எண்ணெய் இருக்கும் வரையில்தான் அது எரியும்; இல்லாத விடத்து அணைந்து விடும். இதே போன்று-

பொதுமகளிர் (பரத்தையர்) அன்பும் பொருளும் இருக்கும் வரையில் தான்.

இல்லாத போது அதுவும் அணைந்து விடும்.

விளக்கையும், பொதுமகளிரையும் ஒன்றாக நோக்கிப் பாடிய நாலடிச் செய்யுள் கீழே:

"விளக்கொளியும் வேசையர் நட்பும் இரண்டும்
துளக்கற நாடின் வேறல்ல—விளக்கொளியும்
நெய்யற்ற கண்ணே அறுமே, அவரன்பும்
கையற்ற கண்ணே அறும்"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




அட்டைப் படக்கதை

அரண்மனை வாசலிலே ஆர்த்தெழுந்தது போர்ப் பறை! இடி முழக்கமென முரசுகள் ஒலித்தன.. வெற்றிக்களிப்போடு வீரர்கள் அணிப்படை வீறு கொண்டெழுந்தது. வேல்களும், வாளும் மின்னி மிளிர்ந்தன... விடுதலை கீதம் இசைத்து வில்லேந்தி விரைந்தனர் வீராங்கனைகள்.

வெற்றித்திருநகர்... வேலவன் மா மன்னன் போர்க்கவசம் பூண்டான். செந்தணலாய் கொதித்துக் கிடந்தது அவன் கண்கள், எரிமலையாய் பொங்கி வழிந்தது அவனது நெஞ்சம்; ...ஆம்...கங்காபுரிப்பேரரசுக்கு கப்பம் கட்டி அடிமையாய் வாழ்வதை வெறுத்தான். வளமான தனது நாட்டுப் பொருளாதாரம் வரண்டு கிடக்கும் கங்காபுரியை கொழுக்கவைப்பதை எதிர்த்தான். கடல்படு திரவியங்கள் கயவர்களிடம்... பொன்னாய் மணியாய், புரள்வதைக் கண்டு குமுறினான்... சுதந்திரமான நாடு இன்றேல் சுந்தரமான சாவு என்ற கடைசி முடிவுடன் கங்காபுரியை களத்திலே காணப் புறப்பட்டான் வேலவன்.

ஏறு போன்ற நடையினால், ஏணிப்படிகள் எழுந்து வீழ்ந்தன...இறங்கி நின்ற வேலவனை ஏறிட்டு நோக்கினாள் மலர்க்கொடியாள் மாதவி. சிங்கமென நின்றிருந்த... சிந்தைக்கினியவனின் சிங்கார அழகை சிற்றிடையாள் சில நிமிடம் நோக்கிப் பிரமிப்பால், பேசாமடைந்தையானாள், "அன்பே!.. ஏன் அங்கேயே நின்று விட்டாய்!... களமாடப் புறப்பட்ட கணவனை கனியிதழால், வாழ்த்தி வழியனுப்புவதை மறந்து விட்டாயா!..." வேலவன் புன்சிரிப்போடு கேட்டான், புள்ளிமான் தலை நிமிர்ந்தது..., அதன்... நீளமான நயனங்களில் நீர்திரையிட்டது. "வெற்றித் திருநகரின்..... விடிவிளக்கே;... என்னை இந்த நிலையில் விட்டுப் போக... எப்படியத்தான் மனம் வந்தது,"... அவள் சிணுங்கினாள்.

"மாதவி..... மண் ஆண்ட பரம்பரை... இது முன் ஆண்ட சரித்திரங்கள் மாறிடவில்லையே!.. உன் கவலை புரிகிறது, வயிற்றுப் பேழை கனக்கும் நாளை நினைத்தா கோழையாகிறாய்? புலிக்குப் பூனை பிறக்காது கண்ணே!... போய் வரட்டுமா?" வேலவன் வினவினான். சங்குகள் ஒலித்தன... "அத்தான்... என்று அலறிய வண்ணம் அகன்று விரிந்த, மறத்தமிழனின் மார்பில் மதி முகம் புதைத்தாள் மாதவிப் பெண்நிலா.

"என்றுமில்லாத அழுகை புரிய முடியாத போக்கு...விசித்திரமாக இருக்கிறது உன் விளையாட்டு... எல்லை ஓரங்களில் எதிரிப்படைகள் தொல்லை தர... இல்லை... இனி நாங்கள் அடிமைகள் என்று வில்லை வளைத்து வீரர்கள் காத்திருக்க, முல்லைக் கொடியாளே!... உன் சொல்லை முடி... விடைதா..." சற்று கோபமாக பேசினான், செந்தமிழ் மன்னவன் வேலவன்.

மார்பு தவழ்ந்த முகம் எடுத்தாள் மங்கை நல்லாள், "கங்காபுரி கடல்... நாமோ? சிற்றலை எதிர்ப்பதால் என்னத்தான் பலன்..."

"ஆம்..... கடலுடன் அலை மோதுவது விசித்திரம்!.. தமிழன் வீரம்... சூறாவளியின் பெருத்த அலை... அது பொங்குவதுமில்லை... பொங்கினால்... கடல் என்னும் பெயருமே

வாடிகன் நூல் நிலையத்தில் இரண்டு பைபிள் புத்தகங்கள் உள்ளன. ஒன்று 60 சென்ரிமீட்டர் கனமுள்ளது; இன்னொன்று இரண்டு சென்ரிமீற்றர் கனம். முதல் புத்தகத்தில் "ஏவாள் ஆதாமுக்குச் சொன்னது" என்றும் இரண்டாவது புத்தகத்தில் "ஆதாம் ஏவாளுக்குச் சொன்னது" என்றும் குறிப்பிட்டிருக்கிறார்கள்.

அனுப்பியவர்:
செல்வன். கே. சதீஷ்குமார்,
கிரான் (கி.மா)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இல்லை:... மாதவி.... விவாத வேளையல்ல, விடுதலை வேட்கை பிரவாகித்து ஓடுகின்ற நேரம்! மடைதிறந்து விட்ட உணர்ச்சி வெள்ளத்துக்கு தடை போட நினைப்பது அறிவீனம்,'' கோபக் கனல், கொவ்வைச் சிவப்பாய் அவன் முகத்தில் கோடுகளை இட்டது.

கொஞ்சும் மொழியாள், அவன் கோலம் கண்டு அஞ்சினாள். தனது பிஞ்சு இதழால், ''மணிமுடி மன்னவா! மறவர் குல வேந்தே!.,.. பண்டைத் தமிழ் நாட்டை—பழந் தமிழ் மண்ணை காக்கப் புறப்பட்ட தங்களை... கால்கடுக்க நிறுத்தி வைத்து-காலங் கடத்திவிட்டேன்,...'' மாதவியாள் மென் கரத்தில் மெல்லக் கிடந்த குங்குமத்தை எடுத்தாள், "வெற்றித்திரு நகரின் நெற்றியிலே திலகமிடுகிறேன்,... அதிகார வெறிபிடித்த கங்காபுரியை அழித்துவிட்டு வாருங்கள் அத்தான்'' வீர உணர்வு அவளது பொன்னுடலை மெல்ல நடுங்க வைத்தது, புன்முறுவலுடன் அணைத்தான் வேலவன். "அடி...பேதைப் பெண்ணே! சிறிது முன் துடிக்க வைத்து விட்டாயே!...'' அவளது வயிற்றிலே கை வைத்து "ஒருவேளை...போரின் முடிவு... நமக்குப் பாதகமாக மாறினால்! திருமகனை பெரு வீரனாகமாற்றி விடு! கங்காபுரியே அவனுக்கு போர்க்களமாகட்டும்! காலமெல்லாம் அதனை அழிப்பதிலே கண்ணாக இருக்கட்டும்! அக்கிரமங்களை அழிக்கவே அவனது உயிர் வாழட்டும்...'' வேலவன் வெஞ்சினத்தால் கூறிவிட்டு... விழிகளை அவள் மீது ஓட்டினான். காதலாள் மெல்ல அவன் கால் பாதம் தொட்டு கண்களில் ஒற்றினாள். கனியிதழால் கன்னத்தில் முத்தமிட்டாள். மறு கணம்...! மயங்கிச் சாய்ந்தாள்.

வேலவனின் வெண்புரவி வீறு கொண்டு பாய்ந்தது. காற்றினும் கடிதாய்ப் பறந்தது. பொன்னிறப் பூக்களை நாற்புறமும் சிந்தி, அமைதியாய் இருந்த ஒரு பூங்காவனத்தை விரைந்து வந்த வேலவனின் வெண்புரவி அடைந்து நின்றது. புரவியிலிருந்து பாய்ந்தான்



மன்னன். புனிதமான ஆலயத்துள் நுழைகின்ற பக்தனைப் போல பூஞ்சோலைக்குள் நடந்தான், மையப் பகுதியிலே ஒரு மணி மண்டபம் அந்த மண்டபத்தில்... வெற்றித் திருநகரின் வீரபிதா! விடுதலை கீதம்பாடும் பல லட்ச மக்களின் இதய கீதம். தந்தை சூரிய தேவரின் சமாதி... ஆம், அறவழியே நம் வழி! பொறுப்போம் பூமியாள்வோம்... என்ற தாரக மந்திரங்களால் சுதந்திர தாகமுள்ளோரை இதுவரை தடுத்து, இரத்தக் களரிகளை ஏற்படுத்தி... மனித உயிர்களை குடித்து ஆட்சி நடத்த விரும்பாத அறப்போர் வீரனின் கல்லறையிலே கை கட்டி வாய் புதைத்து, அடக்கமாய், முழந்தாளிட்டான் வேலவன்.

"கருணையின் வடிவே! காலமெலாம் கட்டிக்காத்த பொறுமையின் எல்லை போர்க்களமாயிற்று மதிப்புடன் காத்த மனித—உயிர்கள்—மணல் மேடுகளாய் குவியப் போகும் அதன் உடல்கள்; அந்த உடல்களிலே ஊற்றெடுத்து ஓடப்போகும் இரத்த ஆறு! அந்த ஆற்றில் தோய்ந்து, நாளை பறக்கப் போகிறது நமது கொடி!..சகல சுதந்திரங்களும் பெற்ற தனி நாட்டில் நம் மக்கள் வாழ... இப்போரிலே எமக்கு வெற்றி கிடைக்க பூரண ஆசியை வழங்குங்கள் தந்தையே!'' தலை கவிழ்ந்தான்... கண்ணீர்த் துளிகள் விழுந்தன; கரங்களில் இருந்த மல்லிகைப் பூக்களை சொரிந்தான்.

வெண் புரவி கனைத்தது. விரைவாய்த் தாவினான் வேலவன். படைத்தளபதிகள் தலை வணங்கினர். தலைவனைக் கண்ட வீரர்கள் தம்மை மறந்து வெற்றி முழக்கமிட்டனர்.

படை புறப்பட்டது! கண்ணுக் கெட்டாத தூரம்வரை கடல் போல நீண்டு விரிந்து நடந்தது!

எண்ணற்ற புரவிகளின் குளம் பொலிகள் எண் திசையையும் அதிரவைத்தன! புழுதிப்படலம் போர்ப்படையை மூடிற்று! இலட்சக்கணக்கான உயிர்களைப் பலிவாங்கி... இரத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தப் பசியோடு காத்துக்கிடந்தது. எல்லை வெளி வெறிப் படையோடு, கொள்கைப் படை மோதிற்று!

வேல்கள் பறக்க வீணர்கள் சரிந்தனர்; வாள்கள் அறுக்க வம்பர்கள் அழிந்தனர்; சூறுவளியாய் சுழன்று போர் புரிந்தான் வேலவன். சிரங்களும் கரங்களும் சிதறி விழுந்தன! மண்ணுக்காய்ப் போரிட்டது மறவர் படை, பொன்னுக்காய் அலைந்தது உலுத்தர் படை! குருதி ஆறு கொப்பளித்து ஓடிற்று! பேய்க் கழுகுகள் பிண மலைகளை தேடிற்று!

எல்லைக்களத்தில் இருந்த கொடிமரத்தில் கங்காபுரிக் கொடி பறந்து கொண்டிருந்தது, அதை இல்லாமல் செய்ய போராடியபடி முன்னேறினான் வேலவன், இடக்கரத்திலே சுதந்திரக் கொடி... அதை கொடிமரத்திலே ஏற்றிட முனைந்தான், பலரின் வாள் வீச்சுகளை ஒரே சமயத்தில் தடுத்து, தனது முழுச்சக்திகளையும் திரட்டி தீரமாக போராடினான்... அவ்வேளை... படைத் தளபதிக்கு முன்னே ஒரு வீரன் புயலென வந்தான்... "தளபதியாரே! மன்னர் ஆபத்தில் இருக்கிறார் படைகள் அவரை சூழ்ந்து விட்டன...... சுதந்திரக் கொடியை கம்பத்தில் ஏற்ற வேண்டும் விரைவாக முன்னேறுங்கள்'' சொல்லி விட்டு வேலவனின் பக்கமாக பாய்ந்தான் அவ்வீரன், போர்க்கவசமணிந்த அந்த வீரன்... வேலவனை அண்மித்தான்...கரத்திலிருந்த கொடியைப் பற்றி...... "நமது படைகள் தமது சக்தியை இழந்து கொண்டிருக்கின்றன!... அவைகளை ஊக்குவிக்க இந்தக் கொடி கம்பத்திலே பறக்கவேண்டும்... நான் ஏற்றுகிறேன் விடுங்கள் கொடியை'' என்றபடி அப்புது வீரன் கொடியைப் பறித்தான். ஒரு கணம், வியப்பால் அதிர்ந்தான் வேலவன். வீரனின் குரலில் ஆணையிடும் தன்மை இளம்பியதும், தனது படை வீரன் அல்லாத ஒருவன் திடீரென வந்ததும் அதிர்ச்சியாயிருந்தது மன்னனுக்கு.

வேல்களையும், வாள்களையும் அலட்சியம் செய்து, தடுத்து, கம்பத்திலே சுதந்திரக் கொடியை ஏற்றினான் புது வீரன், கங்காபுரிக் கொடி மண்ணிலே விழுந்தது. விடுதலைக் கொடி விண்ணிலே வீறு கொண்டு பறந்தது.

மறவர் படை வெற்றிக் கோஷமிட்டது, முன்னைவிட வேகமாக முன்னேறியது வெற்றித் திருநகரின் வீரர் படை. கொடியேற்றிய வீரனின் நெஞ்சை குறிவைத்துப் பாய்ந்து வந்தது கங்காபுரிக் கட்டாரி...... மறுகணம்... மலையென மண்ணிலே சரிந்தான் அந்த மாவீரன்.

கங்காபுரிப்படை பின்வாங்கி ஓடியது. காட்டுத்தீயாய் பரவி எழுந்த சுதந்திரப் போருக்கு முன்னே தாக்குப் பிடிக்கமுடியாமல் தறிகெட்டு ஓடியது... ஆம்; ஆண்டாண்டு காலமாய் வெற்றித் திருநகர் மக்களைப்பூட்டியிருந்த அடிமை விலங்கு அறுத்தெறியப்பட்டது. போர் முடிந்தது.

வெற்றிக் கம்பத்தின் கீழே சரிந்து கிடந்த வீரன் முகத்திலே எல்லையில்லாத ஆனந்தம். ''சுதந்திரம்...'' "சுதந்திரம்'' அவனது குரல் பெரிதாய் ஒலித்தது. அவனது மார்பிலே பாய்ந்திருந்த பாதகர்களின் கட்டாரி வீர உயிரை விழுங்கிக் கொண்டிருந்தது. வேலவன் வீரனருகே வந்து... அவனது தலைக் கவசத்தை கழற்றினான், மறுவினாடி...அப்போர்க்களமே கிடுகிடுக்க "மாதவி'' என்று அலறியபடி மண்ணிலே வீழ்ந்தான்.

வீரகாவியமொன்றை இயற்றி விட்ட பைங்கிளியாள் மாதவி மெல்லப் புன்னகைத்தாள், "மாதவி... நீ... நீயா? வெற்றிக் கொடியேற்றினாய்! வீரமகளே! விடுதலைப் போருக்கு உன்னை விலை கொடுத்து விட்டாயா?'' வேலவனின் இதயம் வேதனையால் கொதித்தது, மாதவியின் உடலை தன் மடியிலே தாங்கினான். "அ...த்தான்...! நீங்கள் விரும்பிய சுத...ந்...திரம்!நமது நாடு விரும்பிய விடுதலை... எல்லாம் கிடைத்து விட்டன!... ஆனால்... உங்களுக்கு!... உங்கள் மகன் கிடைக்காமல் போய் விட்டான்'' மாதவியின் விழிகள் நீரை உகுத்தன! 'மாதவி!.. நினைக்க முடியாத வீரச் செயலால் வரலாற்றில் நீ போற்றப்படுவாய்!... மாதவி! உன் மலருடல் தூங்கப் போகும் இந்த மண்ணை... எனது உயிர் உள்ளவரை—வெற்றித் திருநகரில் ஒரு தனி மனிதனின் உயிர் ஊசலாடும் வரை... மாற்றான் தொட விடமாட்டேன்... இது சத்தியம்'' மாதவியின் நெற்றியிலே இரத்தத்திலகமிட்டான் வேலவன். வேலவனின் வீர முகத்தை தடவினாள் மாதவி. அவளது முகத்தில் திருப்தியின் சாயல் தென்பட்டது.

மூச்சு வேகமாக இரைந்தது,... வேலவனின் பாதங்களை இறுகப்பற்றினாள்,... மேலே... கம்பீரமாக—இனிமேல், என்றும் சுதந்திரமாக பறக்கப் போகும் எழுச்சிக் கொடி... பட்டொளி வீசிற்று!...மறக்குல மங்கை, தியாகச் சுடர்... மான் விழியாள் மாதவி... பூவுலகு விட்டு பொன்னுலகு ஏகினாள்.

(யாவும் கற்பனை)

## நெஞ்சே!

நெஞ்சே உன் போலி நட்பையும், வஞ்சகத்தையும் நான் அறியாதவனல்ல. நீ எப்போதும் அவர் பக்கம் நின்று என்னைக் கை விடுகிறாய் என்பது எனக்குத் தெரியாததா? இருக்கும் போது அவரிடமிருந்து மிகுதி இன்பம் பெற எண்ணி நான் சிறிது ஊட நினைத்தால், நீ அது பொறுக்காமல், அந்த ஊடலை உடைத்துப் பாழாக்கி அவர் மீது போய் விழுவாய். ஆனால் இப்போது அவர் இல்லாத நேரத்தில் ஏதோ அவர் மீது குறைப்படுவது போல் போலிச் சீற்றம் சீறுகிறாய்.

(குறள்: 1246)

# மேதைகளின் விநோத மனப்பாங்கு

பேரறிவாளர்களும், மேதைகளும், வாழ்வில் முன்னேற எவ்வளவு தூரம் போராடினார்கள் என்பதை அவர்களது வரலாறுகள் படம்பிடித்துக் காட்டுகின்றன.

தங்களது விடாமுயற்சியாலும், மனஉறுதியாலும், சகிப்புத்தன்மையாலும், முன்னேறியவர்களிடமும் கூட, கேலித்தனமான செய்கைகளும், வினோதச் செயல்களும், சலனங்களும் நிறைந்திருந்தன. எந்த மனிதனுமே பலவீனங்களின் அடிமையாகி விடுவதற்கு இவர்களது வரலாறுகளே சான்றுகள்.

பெர்னாட்ஷா அறிவுத்திறமையும், சமயோசிதமாக பேசுவதிலும், வார்த்தையால் பதிலடி கொடுப்பதிலும் வல்லவர். ஒருமுறை அவரது திறமையை மட்டம் தட்ட எண்ணிய ஒரு பெண்...பெர்னாட்ஷா கலந்து கொண்ட விருந்தில் அவரது பக்கத்தில் போய் அமர்ந்து கொண்டாள்,

'இளமை இனிமையானது பார்த்தீர்களா' என பெர்னாட்ஷாவிடம் கேட்டாள்.

'ஆம் இனிமையானது மட்டுமல்ல...சிறுவர்களைக் கெடுத்து பயங்கர குற்றவாளியாக்குவதிலும் திறமையானது தான் இளமை' என்று சுடச்சுட பதில் சொன்னார். அந்தப் பெண் வாயை மூடிக்கொண்டாளாம்.

ஆபிரகாம் லிங்கன் யாரையும் கடுமையாக பேசவோ அதட்டவோ...கோபப்படவோ மாட்டார். ஒருமுறை தனது சப்பாத்துகளுக்கு பொலிஷ் போட்டுக் கொண்டிருந்தார் அதைப் பார்த்த ஒருவர் 'ஏளனமாக நீங்களே உங்கள் சப்பாத்துக்களை பொலிஷ் செய்து கொள்வீர்களோ' என்றார்.

லிங்கன் அமைதியாக... 'நீங்கள் யாருடைய சப்பாத்தை பொலிஷ் செய்வீர்கள்' இந்த பதிலைக் கேட்ட பிறகும் லிங்கனுடன் வாதாட அவருக்கென்ன பைத்தியமா? பேசாமல் நடையைக் கட்டினாராம்,

ஒருமுறை லிங்கன் சட்டத்தை மீறிய இரண்டு குற்றவாளிகளுக்காக வழக்கை ஏற்று நடத்தினார். அதே நீதிமன்றம் அதே நீதிபதி—இரண்டுமே சட்டத்தை மீறிய குற்றம். ஆனால் லிங்கன் காலையில் வழக்காளிக்காக வாதாடி வெற்றியும் பெற்றார். அதே போன்ற வழக்கில் எதிராளிக்காக வாதாடினார். இதை கவனித்த நீதிபதி அவரது மனமாற்றத்தைப் பற்றி வினவினார்.

'பிரபு... காலையில் நான் தவறு செய்திருக்கலாம்... ஆனால் இப்போது நான் நேர்மையாக வாதாடுகின்றேன்' என்றார்.

உலகப்புகழ் பெற்ற ரஷ்ய எழுத்தாளர் திருமணத்தைப் பற்றியும், வாழ்க்கையைப் பற்றியும், காதலைப் பற்றியும் மாறுபட்ட எண்ணமுடையவர். இவர் மனம் ஒரு நிலையிலிருக்காது. பல தடவைகள் தற்கொலை செய்து கொள்ளக்கூட இவர் நினைத்ததுண்டாம். அவரை விட மிகவும் வயது வித்தியாசமுள்ள 17 வயதுப் பெண்ணை இவர் திருமணம் செய்து கொண்டபோது அகில உலகமும் அவரது துணிச்சலையும், புதுமையையும் பெரிதும் பாராட்டின. ஆனால் அவரது குடும்பத்தவர்கள் இவரை பைத்தியக்காரன் என்று திட்டினார்கள். எதைப் பற்றியும் இவர் கவலைப்படவில்லை. எதையாவது புதுமையாக செய்யவேண்டும் என்று விரும்பிய இவர் என்னால் பறவை போல பறந்து காட்ட முடியும் என்று சவால் விட்டு, இரண்டாவது மாடியிலிருந்து பறவையைப் போல கையையும் காலையும் ஆட்டியபடியே பாய்ந்துவிட்டார். அதிர்ஷ்டவசமாக ஒரு புல்தரையில் விழுந்ததால் உயிர் தப்பினார்.

லோர்ட் பைரன் என்பவர் தூங்கும் போது இரண்டு பக்கங்களிலும் இரு கைத்துப்பாக்கிகளை வைத்துக் கொண்டு தூங்குவது வழமையாம். தீய கனவுகளிலிருந்து தப்புவதற்காகவே இந்த பாதுகாப்பு.

பெஞ்சமின் பிராங்ளின் என்ற நாவலாசிரியர் நித்திரை செய்வதற்கு முன் தனது தனி அறையில் பத்து நிமிடங்கள் நிர்வாணமாக நடப்பார். அவரது படுக்கை அறையில் நான்கு கட்டில்கள் போடப்பட்டிருந்தன. ஒவ்வொரு கட்டிலிலும் மாறி மாறி படுப்பாராம்.


லோர்ட் கிஜ்னர் பெண்களிடமும் பூனைகளிடமும் பயப்படுவது போல் எந்தப் பயங்கரமான மிருகங்களுக்கும் பயப்படுவதில்லையாம்.

ஹென்றி பெல்ஷாக் இரண்டு பக்கங்களிலும் இரண்டு மெழுகுவர்த்தியை ஏற்றிய பிறகு தான் எழுதத் தொடங்குவாராம்.

எஸ். கே. சுப்பையா
பசறை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கர்நாடக இசையும் தமிழ்த் திரைப் பாடல்களும்

இயலும், இசையும், நாடகமும் ஒன்று சேருமிடமாக, இருபதாம் நூற்றுண்டு விஞ்ஞானம் திரைப்படத்தை அறிமுகப்படுத்தியது. பொது மக்கள் தனிச் சரக்கை வரவேற்கும் பாணியை மாற்றி, கூட்டுச் சரக்கான திரைப்படத்தின் மீது மோகம் கொள்ளத் தொடங்கினர். பழம் சம்பிரதாயத்தைப் பேணும் வித்துவான்கள் பலர் திரை இசையை மதித்ததில்லை. அத்துடன் மட்டுமல்லாது இக் 'கர்நாடகங்கள்' அதை இழிவாகத்தான் இன்றும் கூறிவருகின்றனர். அப்படி இழிந்திருக்கும் ஒன்று வளர்வதேன்? இங்குதான் நம்மையும் அறியாத ஒரு கவர்ச்சிகரமான மயக்கும் சக்தி திரைப்படப் பாடல்களுக்கு இருக்கிறது. கடந்த ஐந்து தசாப்தங்களில், திரைப்படப் பாடல்கள் மூலம் கர்னுடக இசை வளர்ந்த வரலாற்றைக் கூறுவதே இக்கட்டுரையின் நோக்கம்.

தமிழில் திரைப்படங்கள் வருவதற்கு முன்னுல் (அதாவது இற்றைக்கு ஏறக்குறைய 50 ஆண்டுகளுக்கு முன்னர்) கர்னுடக இசையைக் கேட்டு மகிழும் வாய்ப்பு பண்டைய சமஸ்தானங்களில் உள்ளவர்களுக்கும், தனவந்தர்களின் மாளிகைகளில் உள்ளவர்களுக்குமே கிடைத்தது. ஏழைப் பாமர மக்களால் (வருடாந்த கோயில் திருவிழாக்கள் தவிர்ந்த ஏனைய நாட்களில்) கர்னுடக இசையின் பக்கமே காதுவைத்துக் கேட்க முடியாத சூழ்நிலை! இந்நிலையில் நாட்டுப்பாடல்கள் லாவணி சிந்து, கும்மி போன்றவற்றையே ஏழைகள் பாடி மகிழ்ந்தனர். அத்தகைய சூழ்நிலையை மாற்றியமைத்த பெருமை திரைப்படங்களுக்கே சேரும் கர்னுடக இசையைத் திரைப் பாடல்களின் வடிவத்தில் உருவாக்கி எல்லோரையும் கேட்டு ரசிக்கும்படி செய்தவர்கள் திரைப்பட இசையமைப்பாளர்களே!

**ஆரம்பம்:**

1931-ம் ஆண்டில்தான் முதல் தமிழ்ப் பேசும் படமான 'காளிதாஸ்' வெளிவந்தது. தமிழ்த் திரைப்படங்கள் தொடங்கிய காலத்திலே இசையமைப்பாளர் என்ற ஒருவர் படத் தயாரிப்புக் குழுவில் இருந்ததில்லை. நடிகர் எனப்படுபவர், ஆர்மோனியம், தபேலா ஆகியவற்றின் பின்னணி இசையுடன் பாடல்களை நடிக்கும்போதே பாடினுர். 1935—40 கால இடைவெளியில் ஆர்மோனியம் வாசிப்பவரே பாடலாசிரியராகவோ அல்லது இசை அமைப்பாளராகவோ உருமாற்றமடைந்தார்.

**முதற் சந்ததி இசையமைப்பாளர்கள்:**

தமிழ்த் திரையுலகின் முதற் சந்ததி இசையமைப்பாளர்கள் வரிசையில் சர்மா சகோதரர்கள், பாபநாசம்சிவன், துறையூர் ராஜகோபாலசர்மா, எஸ். வி. வெங்கடராமன், ஜி. ராமநாதன், எம். டி. பார்த்தசாரதி ஆகியோரைச் சேர்க்கலாம். இப்பாடலாசிரியர்கள் (இசையமைப்பாளர்கள்) யாவரும் கர்னுடக இசைச் சம்பிரதாயத்தில் ஊறித் திளைத்தவர்களாகவே இருந்தனர்.

மக்களுக்குப் பிடிக்கும் எளிய இலகுவான இசையில் இறையன்புப் பாடல்கள் மட்டுமன்றி, காதல் வீரம், சோகம் போன்ற பலவகை உணர்ச்சிகளைப் பிரதிபலிக்கும் பாடல்கள் யாவும் இடம்பெற்றன. இக்காலத்திலே, பாடல்கள் எவ்வளவுக்கெவ்வளவு மிகுதியாக உள்ளனவோ அவ்வளவுக்கவ்வளவு படத்தின் வெற்றி உறுதியாயிற்று. "50க்கும் மேற்பட்ட பாடல்கள் உடைய படம்" என்ற விளம்பரமே ஒரு படத்தின் வெற்றியை நிர்ணயிக்கப் போதுமாயிருந்தது. திரைப்படங்களில் கர்னுடக இசை ஆதிக்கம் செலுத்திய 'பொற்காலம்' இதுவெனக் கூறலாம்.

**பொற்காலத்தின் முடிசூடா மன்னர்கள்:**
**(1935—1950 காலகட்டம்)**

'ஏழிசை வேந்தன்' எம். கே. தியாகராஜ பாகவதரைப் பற்றித் தமிழ் கூறும் இசை மேடைகளும் திரையுலகமும் இன்னும் புகழ் பாடிக்கொண்டேயிருக்கின்றன. இப் பாராட்டிற்குக் காரணம் அவர் கர்னுடக இசையைத் திரைப்படங்களிற் கையாண்ட முறைதான். 'வித்துவப் புலி'களே அதிகம் கையாளச் சிரமப்படும் கர்த்தா ராகங்களான ஐங்காரத்வனி, ஹேமவதி, சாருகேசி போன்றவற்றை பாகவதர் சந்தர்ப்பத்திற்கேற்றபடி அனுயாசமாகக் கையாண்டார். இவ் விராகங்களில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிருதிகள் இயற்றி எப்படித் தியாகராஜ சுவாமிகள் இவற்றிற்கு உருவத்தைக் கொடுத்தாரோ அதேபோல இவ் விராகங்களைப் பாமரர்களிடையே பிரபலத்திற்குக் கொண்டு வந்த பாகவதரை—கர்னாடக இசையுள்ளவரை எவரும் மறக்கமுடியாது. மேலும் ஜன்யராகங்களான நாட்டக்குரஞ்சி ('கவலையைத் தீர்ப்பது நாட்டியக் கலையே') குந்தலவராளி (மனமே நீ ஈசன் நாமத்தை) சரஸ்வதி, மணிரங்கு. புவனகாந்தாரி, விஜயநாகரி, உசேனி போன்றவற்றையும் அவர் லாவண்யமாகப் பாடிப் பரவசமூட்டினார்.

இன்னொரு பிரபல நடிகராக அக்காலத்தில் விளங்கியவர் பி. யூ. சின்னப்பா. ஆரம்பத்தில் நன்னய்ய பாகவதரிடமும், பின்பு புதுக்கோட்டை சிதம்பர பாகவதரிடமும் முறையாகக் கர்னாடக இசை பயின்ற இவரும் தனது பாடல்களில் கர்னாடக ராகங்களை லாவகமாகக் கையாண்டார். "சந்திரகாந்தா கொடி பறந்தாடுது" என்ற தேவகாந்தாரி ராகப் பாடல் இவரை நடித்த முதற் படத்திலேயே தனி இடத்திற்கு உயர்த்தியது. மேலும் இவர் பாடியுள்ள "தாயைப் பணிவேனே" (கல்யாணி), "நடையலங்காரம் கண்டேன்" (கரகரப்பிரியா), "சிலையே நீ என்னுடன் பேச வல்லாயோ" (வாசஸ்பதி), "சந்திரோதயம் இதிலே" (சங்கராபரணம்) போன்ற பாடல்களும் இவரின் சாஸ்திரிய சங்கீத வார்ப்புக்களில் மேம்பட்டவை. மேலும் தியாகராஜ சுவாமிகளின் "நாததனுமனிசம்" என்னும் சித்தரஞ்சனி ராகக் கிருதியை சின்னப்பா அதே ராகத்தில் "காதல் கனிரசமே" எனும் மெட்டில் கூடப் பாடியுள்ளார்.

இக்காலகட்டத்தில் 'புதுமுக'மாகத் தோன்றிய சமீபத்தில் மறைந்த டி. ஆர். மகாலிங்கமும், கர்னாடக இசையைப் பாமர மக்களுக்கு முன்வைத்தவர்களில் முன்னணியில் வைக்கப்படவேண்டியவராவார். இவர் தாம் நடித்த எல்லாப் படங்களிலும் கர்னாடக இசை மரபு குன்றாது சொந்தக் குரலில் பாடல்களைப் பாடினார். இவற்றில் முக்கியமாக 'நந்தகுமார்' 'ஸ்ரீவள்ளி' (இரு படங்கள்) 'திருவிளையாடல்', 'ராஜராஜசோழன்' போன்றவை குறிப்பிடத்தக்கவை. 'நந்தகுமார்' (1938), ஸ்ரீவள்ளி (1945), ஆகியவற்றில் இப்பாடகரின் முதற்காலகட்ட (கதாநாயக) குரலையும், 'ஸ்ரீவள்ளி' (1961), 'திருவிளையாடல்' (1965) ஆகியவற்றில் இடைக்காலகட்டக் குரலையும், 'ராஜராஜசோழன்' (1973), 'அகத்தியர்' (1975) போன்றவற்றில் கடைக் காலகட்ட குரலையும் நாம் கேட்கலாம். மூன்று தசாப்தங்களுக்கு மேலாகச் சொந்தக் குரலில் பாடி நிலைத்த ஒரேயொரு கலைஞர் இவரே.

பாகவதர்—சின்னப்பா—மகாலிங்கம் மூவரையும் தவிர கர்னாடக இசைத்துறையின்




பெரும் சாம்பவான்களான பாபநாசம்சிவன், மகாராஜபுரம் விஸ்வநாதையர், முசிரி சுப்ரமண்ய அய்யர், களக்காடு ராமநாராயண அய்யர், எம். எம். தண்டபாணி தேசிகர், ஜி. என். பாலசுப்ரமணியம், வி. வி. சடகோபன், நாகர்கோவில் கே. மகாதேவன், வீணை எஸ். பாலசந்தர், சிதம்பரம் எஸ். ஜெயராமன், திருச்சிலோகநாதன், மாயவரம் எஸ். ராஜம், ஹொன்னப்ப பாகவதர், கொத்தமங்கலம் சீனு, எம். எம். மாரியப்பா, வி. என். சுந்தரம், எம். எஸ். தங்கப்பா, ஜி. சுந்தரபாகவதர், போன்றோரும் தமிழ்த் திரைப்படங்களிற்பாடி நடித்ததுமன்றி, பெரும்பாலோனோர் கதாநாயக வேடமே போட்டுள்ளார்கள்.

**ச. ஸ்ரீகாந்தா**

பக்தகௌரி, பட்டினத்தார், பக்தகுசேலர், பக்தசேதர், பக்தநாரதர், பவளக்கொடி, பக்ததுருவன், வல்லாள மகாராஜா, மாணிக்கவாசகர், நந்தனார், திருமழிசை ஆழ்வார், ஏகாம்பவாணன், சகுந்தலை, சம்பூர்ண இராமாயணம், சம்பூர்ண மகாபாரதம், சங்கீத அரிச்சந்திரா, சங்கீதக்கோவலன், அல்லி—அருச்சுனா. சாவித்திரி, ஞானசௌந்தரி, மதனகாமராஜன், மகா மாயா, கண்ணகி, குபேர குசேலா, சிந்தாமணி, சிவகவி, திருநீலகண்டர், கிருஷ்ண லீலா, ஸ்ரீ ஆண்டாள், மீரா போன்ற பல படங்கள் அக்காலகட்டத்தில் இசைக்கே முக்கியத்துவம் கொடுத்துத் தயாராயின. மக்கள் இந்தப் படங்களை அந்தக் காலத்தில் பெரிதும் வரவேற்று ஆதரவு கொடுத்தனர்.

(தொடரும்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதோ பாருங்க—வெத்தி மேலோட இடையில் மட்டும் துணியொன்றை கட்டிண்டு வாயிலே பீடித்துண்டொன்று வைச்சுண்டு போயிண்டிருந்தானே! தெரியுதா ஆளை யாரென்று ஒங்களுக்கு? தெரியலேயோ; — பார்த்திங்களா— எந்தப்பெரிய குடும்பத்தில பொறந்த புள்ளே கூட— யார்னு அடையாளம் தெரியாதாக்கும் — காலம் மாறிப் போயிருக்கு! மாறலே! பாவம் செஞ்சவா எல்லாத்தையும் தண்டிச்சிருக்கு!

யாழ்ப்பாணத்துல — பேர் போன கல்லூரி ஒண்ணு இருக்குதே! இந்த நாள் மாதிரி அந்தநாளும் — அது ரொம்ப பேர்போனது. புள்ளைகள் படிக்கிறதுக்குன்னு — கல்லூரிகள் கட்டிப்போட்டிருந்தானுங்க! ஆனா!—புள்ளைகளை சேர்த்துடதுன்னா—அப்பப்பா என்னபாடு படுத்திப்புடருங்க! பெரிய கல்லூரீலே—பெரிய இடத்துப் புள்ளை படிக்கும்—சின்ன இடத்துப்புள்ளை படிக்கும் — பணக்கார வீட்டுப்புள்ளை படிக்க வரும்! ஏழை வீட்டுப்புள்ளே வரும்! — இதுலேயெல்லாம் வித்தியாசம் பாராட்டப் படாது: ஆனா—அந்தச் செயலே லஞ்சம் வாங்கிண்டும், ஊழல் செஞ்சிண்டும் — பணக்கார வீட்டுப்புள்ளைகளை மாத்திரம் சேர்த்துக்குவாங்க! என்ன பண்றது? பணமிருந்தாதான்— அநியாயம், அக்கிரமம்னு யார் பண்ணினாலும் அவங்களை போற்றிறதுக்குன்னும்— நாலு பேர் இருக்காங்களே!

அந்தக்கல்லூரியில — என் பேரனோட படிச்சவன்! அந்தக் கல்லூரியில்தான் என்மகன் படிச்சான்னா — நான் என்னமோ அந்த நாளையில — பணம் கட்டி வைச்சிருந்தேன்னு நெனைச்சுக்காதிங்க, என்னோட சேர்ந்திண்டு எலிப்புளுக்கையும் காஞ்சிடறமாதிரி பணக்காரனோட சேர்த்து என் புள்ளைக்கும்—இடம் கெடைச்சுப் போச்சு!

இப்பவாவது—நாங்க இப்படி நிம்மதியா உட்கார்ந்துண்டு—என்னமாதிரி பலமா பேசிண்டிருக்கோம். அந்தக் காலத்துல அதொன்றும் முடியாது! நாட்டுல எந்தநாளும் கரைச்சல்; குழப்பம்! இனக் கலவரம்னு நடக்கும். கெதிலே நடக்கும்! கொள்ளை நடக்கும்! எங்கவாவது ஒரு மூலையில்கூட இதுல ஒண்ணு நடந்தா போதும்! — இந்தப் பொலிசு கார பயலுகள் இருக்காங்களே முயலை ஓடவிட்டுப்புட்டு— ஆமையை புடிக்கிறானுங்களே! —கூட்டங்கூட்டமா வந்து—




சும்மா இருக்கிறவனை — வீடு வாசல்ல உட்கார்ந்துண்டிருக்கிறவனை புடிச்சு சாத்து சாத்துன்னு சாத்துப்புடுவாங்க, ரொம்ப அக்கிரமம்! ஒரே போராட்டம் தான்! "தமிழ்"ன்னும், "உரிமை"ன்னும் "விடுதலை"ன்னும்—ஒரே புரட்சி!

இப்பகூட பாருங்க—இந்த வயசிலேகூட — தமிழைப்பத்தி யாராவது என்னாலும் சொல்லிப்புட்டான்னா — நெருப்புக் கட்டமாதிரி கோபம் பொத்துண்டு வந்துன்னு — அவன் தலையில் இடி விழனும்னு— திட்டாமலாவது — இருந்திடுவோம்மா?

அதுவும் இந்த வயசில! இந்தகாலத்துல! அப்போ— அந்த காலத்துல—அந்த இள வயசில — அந்தத் துடிப்புத் தான்டிருக்கிற—என் புள்ளைக் கெல்லாம் என்னமாதிரி இருந்திருக்கும்!

ஏதோ ஒரு போராட்டத்துல என் மகன் கலந்துண்டான்னு என் புள்ளையை கல்லூரியிலிருந்து வெளியேவூட்டுட்டாங்க! என்றை அந்த பிரின்சிபல்கூட! இவங்களுக்கு எதிரானவன்! ரொம்ப கெட்ட பயல்! ஆனால் என் புள்ளையை இவனால வெளியேதான் போட முடிஞ்சுதே தவிர அவன் திறமையையோ — உணர்ச்சியையோ அடக்கமுடியல! அவன் இன்னொரு கல்லூரியில படிச்சு என்னமாதிரி இப்போ நல்லா வந்துட்டான்! அதுக்கப்புறம் எத்தனை போராட்டுத்துல கலந்திருப்பான்.

இதை ஏன் நான் சொல்றேன்னா இப்போ போயிண்டிருந்தான்னே ஒரு தடியன்! அவனுக்கு மூளை ஒருமாதிரி! பைத்தியம், இவனும் என் புள்ளேயோடதான் படிச்சவன்! இவன் பெரிய குடும்பம்! ரொம்ப பணக்காரங்க!

அந்த நாளையில கொஞ்சப் பையன்களுக்கு அவங்க இனத்துல மொழியில பற்றும் ஆர்வமும் இருந்த மாதிரி—அதுக்காக தங்க வாழ்க்கையையும் பொழுதையும் வீணாக்கிண்ட மாதிரி வேறுவேறு விசயத்திலும் தங்கபொழுதை வீணாக்கிறதுக்குன்னு கொஞ்சப்பேர் இருந்துண்டுதானிருந்தாங்க, அதுல இவனும் ஒருத்தன்!

ரொம்ப பேர் நினைச்சுண்டிருக்காங்க! ஒரு காலத்துல தங்களுக்கு வசதியும் வாய்ப்பும் இருக்கிறப்போ — மற்றவாளுக்கு செய்யிற அநியாயமும் அக்கிரமமும் துரோகமும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எல்லாத்திலேருந்தும் இன்
னெருகாலத்துல தங்களுக்கு
ஆபத்தோ பழியோ! ஏற்பட்
டிருக்காம தப்பிச்சுக்கலாம்னு!
எல்லாத்துக்குமே! ஆண்டவன்
இருக்கான்பா! நல்லது செஞ்
சவங்களை கவனிச்சுக்காட்டி
லும் கெட்டது செஞ்சவங்களை
கவனிச்சிண்டுதானிருக்கான்!

படிக்கிற நேரத்துல இவ
னெரு பெண்ணை காதலிச்சு
அவளும் இவன் கல்லூரிக்கு
பக்கத்துக் கல்லூரியிலதான்
படிச்சிண்டிருந்தாளாம். கல்
யாணம் பண்றேன்னு சொல்லி
கெடுத்துப்புட்டான்! அவளைத்
தொட்டவன் அப்பன்கிட்டே
சொல்லி கல்யாணம் பண்
ணிக்க வேண்டியதுதானே?
காசு பணமா இல்லே!

இவன் என்ன பண்ணிட்
டான் தெரியுமா? அப்பன்
காரன்கிட்டே என்னமோ
சொல்லி — பணம் கொஞ்சம்
வாங்கிண்டு — வெளிநாட்டுல
போய் படிக்கப் போறேன்னு—
போயிட்டான்! —போறேன்னு
இவளுக்குக்கூட சொல்லேலல்ல!

அவன் போனப்புறம்தான்
அவன் காலை வாரிப்புட்டு
போயிட்டான்னு இவளுக்கு
தெரிஞ்சுது. அதுக்குடன இவ
ரெண்டு மாசமாயிட்டா!
இனிமே எப்படி வீட்டுக்கு
போய் சொல்றது! மானம்
போயிடுமே — அப்பன்காரன்
வெட்டிப் புதைச்சுப் பூடு
வானே.

குழந்தைதானே! நல்லா
ஏமாந்துட்டா! ஒண்ணுமே
செய்ய வழியில்ல! ஏன்!—
மருந்து குடிச்சு தற்கொலை
பண்ணிண்டா!?

இவாளும் ரொம்ப பெரிய
குடும்பம்! கார் இருக்கு, வீடு
இருக்கு! பணமிருக்கு! அது
தானே கெட்டுப்போனு! ஏழை
வீட்டுப் பொண்ணு இருந்தா
தான் ஒழுங்கா இருந்திருக்
குமோ?

இவ—தற்கொலை பண்ணிக்
கறப்போ — கடுதாசி ஒண்ணு
எழுதி வைச்சிட்டுத்தான்
போயிருக்கா! அதுல எல்லா
விசயமுமே தெரிஞ்சு போச்சு!
நாலு அண்ணன்மாருக்கு இவ
ஒரே தங்கச்சி! விட்டு வைப்
பானுகளோ?

'அந்த அயோக்கியப்பய!
இண்ணைக்கு இல்ல பத்து வரு
ஷம் கழிச்சு வந்தாலும் தீர்த்
துக் கட்டிப்பூர்றேன்னு கங்
கணங்கட்டிண்டாங்க!



செத்த வீடெல்லாம்—
ரொம்ப சோகமா முடிஞ்சுது!
அவங்க சொல்லி வைச்ச
மாதிரி நாலு வருஷத்துக்கப்
புறம் ராஜா மாதிரி—வெளி
நாட்டிலேருந்து வந்தாரு!
இவர் நெனைப்பு நாலு வருஷ
மாச்சே—எல்லாம் மறந்திருப்
பான்னு! கல்யாணம் பேசி—
சீதனத்தோட — இன்னெரு
பெண்ணை கல்யாணம் பண்ண
லாம்னு—ஆசையும் போல!

ஊரில் உள்ள பொண்ணை
யோ — பெண்டாட்டியையோ
கெடுத்தவங்களுக்கு இன்னெரு
காலத்துல யாராவது உதைப்
பானங்கறத ரொம்பப்பேர்
மறந்துபோயிடறுங்க! அதுனல
இன்னும்ரொம்பப்பேர் அப்படி
அயோக்கியத்தனம் பண்ணிண்
டும் துரோகம் செஞ்சிண்டும்
பசுத்தோல் போர்த்துண்டும்
ஊருக்குள் உலாவிண்டு திரிய
றுங்க...! யார் யார், யாரை
கெடுத்துண்டாங்கன்னு அவங்
களுக்குத் தெரியும்! இவங்களை
யாராவது ஒருநாள் முச்சந்தி
யிலே வைச்சு அடிக்கறப்போ
ஊருக்கும் தெரிஞ்சு போகும்!
நிச்சயமாக அப்படி இருக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கணும்! இன்னொருத்தன் பொண்டாட்டியையோ — கன்னிப்பொண்ணையோ — கெடுக்கறதுக்கு ஒருத்தன் இருந்தான்னு அவனை உதைக்கறதுக்கு நாலுபேர் இருக்கணும்! இல்லேன்னு ஊர் உலகத்துல யாருமே உத்தமன்களாக வாழ முடியாமே உலகம் கெட்டுப் போயிடும்!

அப்புறமென்ன ராஜா மாதிரி வந்து இறங்கினாரு! ஆசாமி வந்துட்டார்னு அண்ணன்மார் கேள்விப்பட்டிண்டு ஒரு நாள் போய் ஆளைப் புடிச்சு எங்கேயோ கொண்டு நல்லா சாத்து சாத்துன்னு சாத்திப்புட்டானுங்க! ஆளுக்கு அறிவில்லாம மூன்றுநாள் கிடந்தான்னா பாருங்களேன்! அப்புறம்தான் வீட்டுக்காரங்க ஆளைக்காணோம்னு தேடிப் போய்பார்த்தா ஆளுமயங்கிப் போய்க் கிடக்கறாரு அதுக்கப்புறம் ஆசுப்பத்திரிக்கு கொண்டுபோனா ஆளுக்கு மூளை ரொம்ப பாதிச்சிட்டுதுன்னு சொன்னாங்களாம்!

அதுக்கப்புறம் என்ன பண்றது? பொலிசு ஓடித் திரிஞ்சு ஆளுகளைப்புடிச்சாலும் ஆண்டவன்தான் இவங்க பக்கம் இருக்கானே! சாட்சியில்லாமல் வழக்கு வீசுப்பட்டு போச்சு! (இப்போ இப்படி திரிஞ்சிண்டிருக்கான்)

அதுதான் சொன்னேனே யாருக்காவது நாங்க வசதியும் வாய்ப்பும் ஏற்படறப்போ அநியாயமும் துரோகமும் பண்ணினா அந்த பாவம் என்னைக்கோ ஒரு நாள் அவங்க பாதையிலே குழிதோண்டி வைச்சிருக்குங்கறதை எல்லோரும் தெரிஞ்சுக்கணும்! அப்போ யாருமே யாருக்கும் அநியாயம் பண்ணமாட்டாங்க! அப்படி தெரியாம அநியாயம் பண்றவங்களை யாராவது நாலுபேர் உதைக்கறப்போ தெரிஞ்சுக்க வேண்டி வரும்!

அவ்வளவுதான்;

“இப்போ பாருங்க! இவன் அலைஞ்சுண்டிருக்கான்தானே!”

(யாவும் கற்பனை)

# என் செய நினைத்தாய்!

பனையால் விழுந்தவனை மாடு ஏறி மிதித்தது போல தமிழினத்தை துன்பம் நாலா பக்கமுமிருந்து ஒன்று சேர்ந்து தாக்குகிறது. தென் ஈழத்தில் இயற்கையின் சீற்றம் ஒரு புறம்; வட ஈழத்தில் இயம காதகர்களின் ஈனத்தனமான தர்பார் மறுபுறம்! புயலும் மழையும் ஒரு புறம்; துப்பாக்கிகளும் குண்டாந்தடிகளும் மறுபுறம் அடுத்தடுத்துச் துன்பம் வந்தால் யாரால் தான் தாங்கிக் கொள்ள முடியும்?

தமிழீழத்து மக்களின் துயரைப் பார்க்கும் போது அன்று பாரதி பாடிய அடிகள் தான் நினைவுக்கு வருகின்றன.

‘விதியே, விதியே, தமிழ்ச்சாதியை
என்செய நினைத்தாய் எனக்குரையாயோ?
நோய்க்களமாக்கி அழிகெனும் நோக்கமோ?
விதியே, தமிழ்ச்சாதியை எவ்வகை விதித்தாய்
என்பதன் மெய்யெனக் குணர்த்துவாய்.’

பாரதி பாடியுள்ளது போல் இயற்கை இன்று கிழக்கு மாகாணத்தை நோய்க்களமாக்கிக் கோரத்தாண்டவமாடுகின்ற அதே வேளையில் வட மாகாணத்தில் காக்கிக் களிசடைகள், கல்தோன்றி மண்தோன்றாக் காலத்து இனத்தை கட்டாயம் அழித்தே காட்டுவோம் என்று கங்கணம் கட்டி காட்டுமிராண்டிகளாக நடக்கின்றனர்.

‘தெண்முனை யடுத்த தீவுகள் பலவினும்
பூமிப் பந்தின் கீழ்ப்புறத்துள்ள
பற்பல தீவினும் பரவியில் வெளிய
தமிழ்ச் சாதி, தடியடி யுண்டும்
காலுதையுண்டும், கயிற்றடியுண்டும்
வருந்திடும் செய்தியும், மாய்ந்திடும் செய்தியும்.’

—என்று இன்றைய வட ஈழ மக்களின் துயரைப் படம் பிடிப்பது போலப் பாடியுள்ளார் பாட்டுக்கொரு புலவராம் பாரதியார். இன்னொரு இடத்தில் பாரதியார் மட்டக்களப்பு மக்களின் இன்றைய அவல நிலையைப் படம் பிடிப்பதுபோலக் காட்டுவதைக் கவனிப்போம்.

‘செத்திடும் செய்தியும் பசியாற் சாதலும்
பிணிகளால் சாதலும் நலிவினாற் சாதலும்...
இஃதெலாங் கேட்டு என்னுளம் துடிக்குது...’

இப்படிப்பாடிய சுப்பிரமணிய பாரதியார் இந்த நிலையில்கூட நாம் மனத் தைரியத்தை இழந்து விடக்கூடாது என்று கூறுகிறார்.

‘அச்சமில்லை அச்சமில்லை அச்சமென்பதில்லையே
உச்சி மீது வானிடிந்து வீழுகின்ற போதிலும்
அச்சமில்லை அச்சமில்லை அச்சமென்பதில்லையே.’

தொடர்ந்து அவர் இன்னொரு இடத்தில் கூறுகிறார்—

செய்கையும் சீலமும் குன்றிய பின்னரும்
உய்வகைக் குரிய வழிசில உளவாம்
எத்திசைத் தெனினும் யாவரே காட்டினும்
நல்லவை தெரிந்து வாழ்வோமாயின்
அச்சமொன்று இல்லை
நேர்வழி அறிந்து நெறியுடன் உழைத்தால்
ஏதுதான் வருத்தினும், ஏதுதான் செயினும்
இறுதியில் பெருமையும் இன்பமும் எமக்கே...’

பிறவிக் கவிஞன் பாரதி அன்று ஏதோ ஒரு சந்தர்ப்பத்தில் பாடியது இன்று எம் தமிழீழச் சூழ்நிலைக்குப் பொருந்தி வருகிறது! காலத்தால் அழியாத கவிஞன் என்று பாரதியைக் குறிப்பிடுவதில் என்ன தவறு சொல்லுங்கள்.

விமோசனத்திற்கும் பாரதி வழி கூறி விட்டான். அவன் கூறிய நேர் வழி யாருடைய வழி என்று நான் கூறத்தேவையில்லை. அது தமிழீழத்தைக் கட்டி எழுப்பும் ஒரே வழி தான் என்று உங்களுக்குத்தெரியும் தானே?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சர்வதேச அரங்கில் பிரச்சினைகளை உருவாக்கும் மொழிகள்

**மொழி** என்பது பரஸ்பரம் ஒருவருக்கொருவர் தம் கருத்துக்களை உணர்த்த பயன்படுத்தும் ஓர் பரிவர்த்தனைக் கருவி எனலாம். மொழியானது மக்கள் வாழ்க்கையை விளக்கிக் காட்டுவதோடு எவ்வாறு இனி மனிதன் வாழவேண்டும் என்பதையும் விளக்குகிறது. சென்ற காலத்தின் அருமை பெருமைகளையெல்லாம் வரலாறு என்ற பெயரால் விளக்கிக் காட்டி, வருங்காலச் சிறப்புக்களையெல்லாம் 'அறநெறி' முதலியவற்றால் விளக்கி மனிதனை மனிதனாக வாழவைக்க மொழி பெரிதும் பயன்படுகிறது.

மொழி மூலம் தான் மக்கட்பண்புகள், கலை, கலாசாரங்கள் வெளிப்படுத்தப்படுகின்றன. மொழி கலாசாரத்தின் ஓர் அம்சம். அத்தோடு; சிந்தனை முறை, ஐக்கியம், வாழ்க்கை முறை தொடர்புகளையும் உருவாக்குகிறது. நாகரீகம், பண்பாடு இன்னதென அறியாது. வாழ்ந்த மனிதனுக்கு அவற்றின் உண்மைகளை மொழியே உணர்த்தியது. விலங்கொடு விலங்காய் வாழ்ந்த மனிதனை தன்னுணர்வு பெறச்செய்து பண்பாட்டுடன் மற்றவர்களோடு பழகவைத்ததும் மொழிதான்.

குறிப்பிட்ட மக்களால் அல்லது குறிப்பிட்ட குழுக்களினால் நடைமுறைப் பாவனையிலுள்ள ஒரு மொழியானது அந்நாட்டு அரசியலமைப்பில் தேசிய மொழிகளாக அங்கீகரிக்கப்பட்டவிடத்தும் அதன் உபயோகமானது மக்கட்படுத்தப்படாது வேறொரு தேசிய மொழி மூலம் தொடர்புறும்படி, அம்மக்கள் தள்ளப்படுமிடத்தும் அங்கு மொழிப்பிரச்சினை உருவாகுகிறது. ஒரு நாட்டில் அரசியல் முக்கியத்துவம் வழங்கப்பட்ட போதும், சில பொருளாதார காரணிகளால் ஒரு மொழியின் பாவனையானது பின் தள்ளப்படும் போது அங்கும் மொழிப்பிரச்சினை உருவாகுகிறது. சர்வதேச மொழிகளுள் ஒன்றாக அங்கீகரிக்கப்பட்ட ஒரு மொழியானது; ஒரு நாட்டில் சிறுபான்மை மொழியாக இருந்தபோதும் பெரும்பான்மை மொழி பேசும் ஓர் இனத்தினர் பொருளாதார ரீதியில் பின்னடைந்தவர்களாக இருப்பார்களாயின் அங்கும் மொழிப்பிரச்சினை உருவாகுகிறது என்பதை அவதானிக்கலாம். இவ்வாறு மொழிகள் பல கோணங்களில் பிரச்சினைகளை உருவாக்குவதை உலக அரங்கில் இன்று அவதானிக்கக் கூடியதாக இருக்கிறது.

எந்த சமுதாயமும் தனித்துவத்தையும், தமது சுயநிர்ணய உரிமைகளை பாதுகாக்கவுமே விரும்புகிறது. இங்கு மொழி என்பது ஒரு சமுதாயத்தினை சுட்டிக்காட்டும் ஒரு கருப் பொருளாகவுள்ளது. எனவே இங்கு மொழியைப் பேண வேண்டியது அவசியமாகிறது. மொழிகளுக்கு பாதுகாப்பும், நடைமுறைப் பாவனையும் இல்லாதுவிடின் அது விரைவில் அழிந்துவிடும் தன்மையது. மொழி அழிந்து போயின் சமுதாயமும் அழிந்து போய்விடும் என்று மக்கெயிம் (Mackaim) என்பவர் குறிப்பிடுகிறார். அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில் ஒரு மொழியானது வளர்வதைவிட அழிந்துவிடும் தன்மைதான் கூடுதலாகவுள்ளது என்றார். இன்று 40%மான உலக மக்கள் மொத்த மொழிகளுள் 12%மானவற்றையே பேசுகிறார்கள் என்று கணிப்பீடு செய்யப்பட்டுள்ளது. இதனின்றும் உலக மொழிகளை நோக்கும் போது அவை அருகி வருவதை அவதானிக்க முடிகிறது. ஆகையால் இன்று எந்தப் பிரதேசத்தை எடுத்தாலும் மொழி ஒரு பெரும் பிரச்சினையாகவுள்ளதை அவதானிக்கலாம்.

உலக அரசுகளின் முக்கிய நோக்கங்களில் மொழி முதன்மை வகிக்கிறது. அதற்கு இன்று சகல அரசுகளும் இனத்தைக்காட்டிலும் மொழியடிப்படையில் கூடுதலாக பிரிந்துள்ளமையை ஆதாரமாகக் கொள்ளலாம். 1973ம் ஆண்டு, 134 நாடுகளிடையே மேற்கொள்ளப்பட்ட அவதானிப்பின்படி இந்நாடுகள் மொத்தத்தில் 68 சத வீத நாடுகளாகவும், இந்நாடுகளின் மக்கள் தொகையானது 61 சத வீதத்தை (3.3 மில்லியன்) கொண்டதாகவும் அமைய; இம் மக்கள் பன்முகப் படுத்தப்பட்ட சமூகத்தில் வாழ்கிறார்கள் என்றும் அவதானிக்கப்பட்டது. அதாவது இனம், மதம், கலாசார வேறுபாடுகளால் பிரிக்கப்பட்ட சமூக அமைப்பில் வாழ்கிறார்கள் என்றும் இந்நாடுகளிடையே மொழிப் பிரச்சினை உண்டென்றும், அதனால் மொழிப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரச்சினை என்பது சர்வதேச பிரச்சினையாக உள்ளது என்பதுவும் நன்கு நோக்க முடிகிறது.

மொழிப்பிரச்சினையுள்ள சில நாடுகளை உதாரணமாகக் கொண்டு ஆங்காங்கே வெவ்வேறு செயற்பாடுகளால் மொழியானது பிரச்சினைக்குரியதாகிறது என்பதை நன்கு விளங்கிக் கொள்ளலாம்.

இலங்கையில் 1833ம் ஆண்டு கோல்புறாக்—கமறன் சீர்திருத்தத்தின் விளைவாக ஆங்கிலக் கல்வி அறிமுகம் செய்யப்பட்டது. இதனால் சுதேச மொழிகள் புறக்கணிக்கப்படலாயின. இதனால் அன்று தமிழர், சிங்களவர்கள் ஒன்றிணைந்து ஆங்கிலேயரை பொது எதிரியாகக் கருதலாயினர். இதன் பின் சுதந்திர அரசுகள் மேற்கொண்ட மொழிக்கொள்கைகள் இரு பெரும் சுதேச இனங்களிடையே மோதலை உருவாக்கின. 1953ம் ஆண்டு சிங்கள மகாசபையின் தோற்றமும், 1956ம் ஆண்டு தனிச்சிங்களச் சட்டமும், மொழிப் பிரச்சினையை மேலும் மெருகூட்டுவதாக்கியது. இவற்றின் விளைவே இரு பெரு இனங்களிடையே 1958ம் ஆண்டுக் கலவரம் தோன்றியது என சேர் ஐவே ஜெனிங்ஸ் குறிப்பிட்டார். Kearney என்பவரும் இலங்கையில் மொழியே பெரும் பிரச்சினையாக உள்ளது. என்ருர். 1972ம் ஆண்டு புதிய அரசியல் சீர்திருத்தமானது. உதாசீனம் செய்த தமிழ் மொழிப் பிரச்சினையை உணர்ந்த இன்றைய தார்மீக அரசு தமிழை தேசிய மொழிகளுள் ஒன்ருக அங்கீகரித்துள்ளது. எனினும் இச்சொல்லின் பிரயோகமானது தமிழர்களுக்கு எவ்வளவுதூரம் சாதகமாக அமையும்? என்பதே மக்களின் ஐயமாகவுள்ளது. ஆயினும் அரசியல் சட்டத்தின் கட்டாய விதிகள் சில மொழி விடயமாக தமிழ் மக்களை இரண்டாந்தரப் பிரசைகளாகவே தள்ளியுள்ளது.

இந்தியாவின் மொழிப்பிரச்சினையானது இருமைத்தன்மையதாயுள்ளதை நோக்கலாம். ஒன்று; இந்திய மொழிக்கு எதிரான மொழிகள். இது தேசிய எதிர்ப்பாகவுள்ளது. இரண்டாவதாக பிரதேசரீதியான மொழிப்பிரச்சினையைக் கொள்ளலாம். அதாவது, பிரதேச சபைகளுள் பெரும்பான்மையினரின் மொழியே அரசகரும மொழியாகவுள்ளது. இங்கு ஏனைய சிறுபான்மையினர் தமது மொழிக்கும் ஆட்சியுரிமை வழங்கவேண்டுமென கோரிக்கை எழுப்பி வருகிருர்கள்.

1951ம் ஆண்டுக் கணிப்பீட்டின்படி இந்தியாவில் 851 மொழிகள் அவதானிக்கப்பட்டன. இதில் 720 மொழிகள் மிகக் குறைந்தோரின் பாவனையிலுள்ளது என்றும்; நோக்கப்பட்டது. ஆயினும "இந்தி" தேசிய மொழியாக்கப்பட்டதும் இச் சிறுபான்மை மொழிகளுக்கு போதிய பாதுகாப்பு அரசியல் திட்டத்தில் வழங்கப்படவில்லை. இந்தியாவின் மொத்தக் குடித்தொகையில் 35 வீதத்தினரே இந்திமொழி பேசுபவர்களாக இருக்க அதனை

வரிமுறிக் கவிதை

## புயல் இன்னும் ஓயவில்லை

அன்பு..

புயல் ஓய்ந்துவிட்டதா?
இல்லவே இல்லை
புயல் இன்னும் ஓயவில்லை
புயலின் பெயரால் நடக்கும்
புன்மைச் செயல்கள்
அமைச்சர்களும் அதிகாரிகளும்
போடும் ஆட்டங்கள்
அங்கும் இங்கும் ஓடும்
ஜீப் வண்டிகள்
அமைச்சர்கள் பறந்து திரியும்
ஹெலிக் கொப்டர்கள்
அன்ருடம் வானெலி தரும்
அண்டப் புழுகுகள் எதுவுமே
அனைத்தையும் இழந்துவிட்ட
மக்களுக்கு ஆறுதல் தரவில்லை
அவர்கள் நெஞ்சில் வீசுகின்ற
பெரும்புயல் இன்னும் ஓயவில்லை

நானே ராஜா இங்கு
யாரும் வரவேண்டாம்
என்றிடும் அமைச்சர்
மாவட்டம் நான் என
மயங்கிடும் மந்திரி
எல்லாம் என் செயல்
என்றிடும் எம்பி மார்
இவர்கள் கண்முன்னே
திசை திருப்பப்படும்
உணவு லொறிகள்
இத்தனையும் கண்டு
எங்கள் நெஞ்சில் வீசுகின்ற
பெரும் புயல் இன்னும் ஓயவில்லை.

பேப்பர்களும் வானெலியும்
பெரிசாய்ப் பீற்றுகின்ற
அயல்நாட்டு உதவிகளில்
அணுவளவும் இன்னும் எங்கள்
அணடையில் வரவில்லை
மாதம் மூன்று மறைந்த பின்னும்
மாற்றங்கள் பெரிதாக ஏதும் இல்லை
வானைப் பார்க்கின்ற வீட்டுக் கூரைகள்
வாயைப்பிளக்கின்றமக்கள் கூட்டங்கள்
இத்தனையும் கண்டு எங்கள்
இதயத்தில் வீசுகின்ற
எரிமலைப் புயல் இன்னும் ஓ
ஓயவே இல்லை! ஓயவே இல்லை!!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேசிய மொழியாக்கியமை மொழிப்பிரச்சினை ஒன்று உருவாக வழிகோலியது எனலாம்.

சுவிச்சர்லாந்து ஒரு சமஷ்டி அரசாகும். இங்கு 1848ம் ஆண்டிலிருந்து மூன்று மொழிகள் தேசிய மொழிகளாக அங்கீகரிக்கப்பட்டுள்ளன. 1970ம் ஆண்டுக் கணிப்பின்படி முறையே யேர்மன் மொழிபேசுவோர் 64.9 வீதத்தினராயும், பிரான்சிய மொழி பேசுவோர் 18.1 வீதமாயும்; இத்தாலிய மொழி பேசுவோர் 11.9 விதமாயும் காணப்படுகின்றனர். இச் சமஷ்டி அரசானது 21 கான்ரன்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது. இவ் கான்ரன்களில் பதினேழில் (17இல்) யேர்மன் மொழி பேசுவோரும் மூன்றில் (3இல்) பிரான்சிய மொழி பேசுவோரும்; ஒன்றில் இத்தாலிய மொழி பேசுவோரும் பெரும்பான்மையினராகவுள்ளனர். இதனால் இப் பெரும்பான்மை மொழி பேசப்படும் கான்ரன்களில் அம் மொழிகளே ஆட்சி மொழிகளாக அமைகின்றன. இதனை பிரதேச ரீதியில் நோக்கும் போது இது ஒரு மொழி பேசும் நாடாகவே காணப்படுகிறது. இதனால் இங்கும் மொழிப் பிரச்சினை தவிர்க்க முடியாததாகிறது.

கனடாவும் ஒரு சமஷ்டிக் குடியரசாகும். இங்கு 80 வீதத்தினர் ஆங்கிலம் பேசுபவர்களாகவும்; ஏனையோர் பிரான்சிய மொழி பேசுபவர்களாகவும் காணப்படுகிறார்கள். பொருளாதார ரீதியில் ஆங்கிலம் முதன்மை மொழியாகக் காணப்படுவதால் பிரான்சியரும் ஆங்கிலம் கற்கவேண்டி தள்ளப்படுகிறார்கள். இதன் மூலம் கூடிய தொழில் வாய்ப்பைப் பெறலாம் என்பது 15—30 வயதுக்கிடைப்பட்ட பிரான்சியரது கருத்தாகும். இந்நிலையில் பிரான்சிய மொழி அருகிவிடலாம் என்பது அவர்களது ஐயமாகும். இந்நிலைமையால் மொழியினைப் பாதுகாக்க வேண்டின் தமக்கென சுய இராச்சியம் ஒன்று அமைய வேண்டும் என்று கோரி அதற்காக கடந்த தசாப்தமாகப் போராடி வருகிறார்கள். இங்கு பொருளாதாரக் காரணிகள் மொழியடிப்படையில் தனிநாடு ஒன்று அமைய வேண்டுமென்ற பாடத்தினை உலகிற்கு புகுத்துவதை அவதானிக்கலாம்.


பெல்ஜியத்தில் ஏறத்தாள டச் மொழி பேசுவோரும் (52%) பிரான்ஸ் மொழி பேசுவோரும் (43%) சரிசமனாகவுள்ளனர். வடக்கே டச் மொழி பேசுவோர் பெரும்பான்மையாயும் இவர்களின் வாழ்க்கைத் தரம் விவசாயத்திலேயே பெருமளவில் தங்கியுள்ளதாயும் அமைய; தென் பகுதியில் பெரும்பான்மையாய் குடியிருக்கும் பிரான்சியர் உயர்ந்த வாழ்க்கைத் தரத்தை உடையோராயும் காணப்படுகிறார்கள். மேலும்; பிரான்சிய மொழி சர்வதேச மொழிகளுள் ஒன்றாக இருப்பதனால் அதன் செல்வாக்கும் பாதுகாப்பும் சிறப்பாக அமைய, பிரதேச ரீதியில் வேறுபடும் டச் மொழி சிறுபான்மை மொழியாகிறது. இதனால் இங்கும் மொழிப் பிரச்சினை என்பது தவிர்க்க முடியாத ஒன்றாகி விட்டது.

பின்லாந்திலும் மொழிப் பிரச்சினை தவிர்க்க முடியாத ஒன்றாக இருப்பதை நோக்கலாம். இங்கு 1919ம் ஆண்டுச் சட்டப்படி பினீசிய மொழியும், சுவீடிஸ் மொழியும் தேசிய மொழிகளாக அங்கீகரிக்கப்பட்டும், சமத்துவம் வழங்கப்பட்டுமுள்ளது. இங்கு சுவீடிஸ் பாசை பேசுவோர் (11%—1919) சிறுபான்மையினராய் இங்கு இருந்தாலும் இம் மொழி ஏனைய நாடுகளில் பெரும்பான்மை மொழியாய் இருப்பதால் அரசியல் ரீதியில் பலம் பெற்றதாய் அமைகிறது. இதனால் பினீசிய மொழியில் முக்கியத்துவம் வலுவிழந்ததாக அமைவது மொழிப்பிரச்சினையை இந்நாட்டில் தவிர்க்க முடியாதபடி தோற்றுவித்துள்ளது எனலாம்.

மலேசியாவும் மொழிப் பிரச்சினையுள்ளடங்கும் நாடாகும். இங்கு சுதேசிகளுக்கும், சுதேசிகளல்லாதாருக்குமிடையில் பெரும் பூசல்கள் இன்று வளர்ந்து வருகின்றன. "மலேசிய தேசிய இயக்கமானது" தமது பாசையின் அடிப்படையிலேயே அரசின் சகல முக்கியத்துவமும் அமைய வேண்டும் என்கிறது.

இவ்வாறு பல்வேறு வடிவங்களில் உலக நாடுகள் எங்கணும் மொழிப் பிரச்சினைகள் தோன்றியும்; இன்னமும் வளர்ந்தும் வருகின்றமையை நோக்கும் போது மொழிப் பிரச்சினை என்பது இன்று சர்வதேச பிரச்சினைகளுள் ஒன்றாவதை அவதானிக்க முடிகிறது.

இணுவை துரைஎங்கரசு
(பேராதனை வளாகம்)






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சுடர் வட்டம்

D. அன்பழகன், "தேவ வாசா", ஓமந்தை.

பொழுதுபோக்கு: நீச்சல், வானொலிகேட்டல், கதைப் புத்தகம் படித்தல், பட்டம் விடுதல்.

க. சுப்பிரமணியம், பாலர் பாடசாலை வீதி, கிரான்குளம் 7, குருக்கள்மடம், (கி. மா.)

பொழுதுபோக்கு: நண்பர் தொடர்பு, வானொலிகேட்டல், தமிழர் விடுதலைக்கூட்டணி கூட்டங்கள் நடத்துவதற்கு ஒத்துழைப்பு கொடுத்தல், சிறு கதை வாசித்தல், தமிழ் ஈழம் அமைப்பது பற்றி நண்பர்களுடன் ஆலோசித்தல், வானொலி நிகழ்ச்சிகளில் கலந்துகொள்ளுதல் ஆகியன.

அ. கோ. பொன்னுத்துரை, குடாகம, அட்டன்.

பொழுதுபோக்கு: கிறிஸ்தவ சமய பிரசங்கங்களில் கலந்து கொள்வது, உதை பந்தாட்டம் விளையாடுவது, வீட்டுத்தோட்டப் பயிர் செய்வது, நேரம் கிடைக்கும் போது வானொலி கேட்டல்.

அ. கோ. சுந்தரலிங்கம், 10-ம் வகுப்பு, ஹைலண்ட்ஸ் மகாவித்தியாலயம், அட்டன்.

பொழுதுபோக்கு: பள்ளிக்கூட பாடங்களை படித்தல், கால்நடைகளை பராமரித்தல், சிறுவர்களுக்கு படிப்பித்தல், வீட்டுத்தோட்டப் பயிர் செய்வது.

ஐ. நலீம், இல 23. குயீன் ரெக்ஸ், தனங்கிழப்பு வீதி, சாவகச்சேரி.

பொழுதுபோக்கு: கலை, இலக்கியம், அரசியல், தமிழ் இலக்கிய ஆராய்ச்சி, தமிழ் மொழித்தொண்டு, சினிமா, பேனா நண்பர் தொடர்பு.

செல்வன் மா. மானசூரியன், அர்ச் அந்தோனியார் கோவில் ஒழுங்கை, அச்சுவேலி வடக்கு.

பொழுதுபோக்கு: சுதந்திரன், சுடர் விரும்பிப் படித்தல் — பாதுகாத்து வைத்தல்; கதை—கவிதை ஆர்வம்; நண்பர் தொடர்பு.

நா. கஜேந்திரன், (தெட்சணாயனன்) கோவிலடி, தம்பலகமம்.

பொழுதுபோக்கு: சமுக சேவை, நண்ப, நண்பியர் தொடர்பு, இலக்கியப்பரிமாற்றம், இலக்கிய விவாதம், சிறுகதை, நாடகம், கட்டுரைகள் ஆக்கம். ("அன்புமணி ஒன்றியம்" என்னும் பெயரில் வாசகர் வட்டம் ஒன்றினை நடத்துகின்றேன்) என்பனவாகும்.

மல்லிகை வண்ணன், 78, மேற்கெல்லை வீதி, ஏறாவூர், செங்கலடி.

பொழுதுபோக்கு: எழுத்துத்துறை, இலக்கிய நண்பர்கள், தொடர்பு. (மல்லிகை, இதயம் பத்திரிகை ஆசிரியர்.)

த. சிவராசலிங்கம், வட்டார இல, 3. கட்டைபறிச்சான், மூதூர்.

பொழுதுபோக்கு: பத்திரிகை வாசித்தல், கவிதை இயற்றுதல், தரமான இலக்கியக் கட்டுரை புத்தகங்களை வாசித்தல், வானொலிகேட்டல்.

கவிஞர் என். மீராசாஹிப் (மீரா) 147 பள்ளி வீதி, புதிய காத்தான்குடி 3.

பொழுதுபோக்கு: கதை, கவிதை எழுதுதல், இலக்கிய நண்பர்களுடன் தொடர்பு கொள்ளுதல் (காத்தான்குடி பலநோக்கு கூட்டுறவு சங்கத்தில் கடமைபுரிகிறேன்.)

மு. துரைசாமி, சதர்லேண்ட், எல்ல.

பொழுதுபோக்கு: கவிதை கட்டுரை எழுதுதல், இலக்கிய நூல்கள், பத்திரிகை, சஞ்சிகைகள் வாசித்தல், இலக்கிய நண்பர்களுடன் தொடர்பு.

இரா. இராமநாதன், இல, 82, செல்லபுரம் வடக்கு, வவுனிக்குளம்.

பொழுதுபோக்கு: பத்திரிகைகள், சஞ்சிகைகள் வாசித்தல், வானொலி கேட்டல், நண்பர்கள் தொடர்பு.

சி. கிருபாகரன், 15, பலாலி வீதி, யாழ்ப்பாணம், தமிழ் ஈழம்.

பொழுதுபோக்கு: சுதந்திரன், சுடர், இளைஞர்குரல் படித்தல், கதை, கவிதை, எழுதுதல், இலக்கியப் பரிமாற்றம்.

என். எம். பாறூக், பெரிய கிண்ணியா, கிண்ணியா—6. திருகோணமலை.

பொழுதுபோக்கு; சுடர், வாசித்தல, வானொலி. பத்திரிகை, நண்பர் தொடர்பு.

### எழுத்துச் சீர்திருத்தம்

எழுத்துச் சீர்திருத்தத்தை சுடரும் கடைப்பிடிக்கவேண்டும் என பல வாசகர்கள் கேட்டிருந்தார்கள். ஒரேயடியாக அவ்விதம் நடைமுறைப் படுத்துவது வாசகர்களை சிரமத்துக்குள்ளாக்கலாம் என்பதால் தலையங்கத்தில் மட்டும் சீர்திருத்தத்தை கையாள்கிறோம்.

— ஆசிரியர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஓர் உள்ளம் ஊமையாகிறது

ஐந்து பெண் பெற்றால் அரசனும் ஆண்டியாவானும். அதே அரசன் யாழ்ப்பாணத்தில் இருந்தால் ஒரு பெண் பெற்றாலே போதும். இந்த இலட்சணத்தில்தான் ஐயாவுக்கு ஐந்து பெண்பிள்ளைகள். அரசனென்றாலும் பரவாயில்லை ஐயாவோ ஏற்கனவே ஆண்டி; ஐந்து பெண்களையும் பெற்று விட்டார். இனி எதிர்காலம்— கேள்விக்குறிதான். இந்தக் கேள்விக்குறி இறைவனின் நெஞ்சில் கொக்கிபோட்டு இழுத்திருக்கவேண்டும். அதனால்தான் போலும் ஐந்துக்குப் பின்னாலே வந்த இரண்டும் ஆண் குஞ்சுகள்.

அது போதும் ஐயாவுக்கு.

அவர்கள் வளர்ந்து ஆளாகிவிட்டால் தனக்கென்ன குறை என்று அடிக்கடி கூறி நிம்மதிப் பெருமூச்சு விடத்தொடங்கி விட்டார். எங்களுக்கும் ஒரு நம்பிக்கையான பிடிப்பு, தம்பிமார் 'வந்து' வாழவைப்பார்கள் என்று.

இந்த மண்ணிலே பெண்ணாக விழுந்தவர்கள் பெருமூச்சுடன் மாய்வது ஒரு சாபக்கேடுதான். அதுவும் ஏழைகள் வயிற்றிலே பிறந்துவிட்டால் ...ம்... பணத்தோடு பிறந்துவிட்டாலும் ஏதோ சுலபத்தில் கரையேற முடிகிறதா? இலட்சம் ரூபாவும் சாதகமுமாக முன் வீட்டுக்காரச் சாரதாவுக்கு மாப்பிள்ளைதேடி, அலைகிறார்களே...

விடிவின் ஒளி தெரியாதவர்கள் கிடைக்கும் பற்றுக்கோல் பயனில்லாவிட்டாலும் பற்றிக் கொள்வதில்லையா? முப்பது வயதான நான் என்னை வாழ்விக்க பன்னிரண்டு வயதுக்குக் கீழ்ப்பட்ட தம்பிமாரை நம்பியது வேடிக்கை இல்லையா?

அம்மா எனது விசயமாக ஐயாவை நச்சரித்து நச்சரித்து வாய்களைத்து ஓய்ந்து விட்டாள். ஐயாதான் என்ன செய்வார்? தோட்டங்களிலே கூலிவேலைக்குப் போவதும் பொழுது பட்டபின் பெருமூச்சுடன் திண்ணையில் வந்து சாய்வதுமாக இருக்கும் அவரால் என்னதான் செய்ய முடியும்?

இவ்வளவுக்காவது என்னைப் படிக்கவைத்து ஆசிரியை ஆக்கினாரே அது போதாதா? ஊர்ப் பள்ளிக்கூடத்துக்கு இடமாற்றம் பெறப் போராடித் தோற்றுவிட்டு முப்பது மைலுக்கப்பாலுள்ள பள்ளிக்கூடத்தில் படிப்பிக்கிறேன். தங்கியிருக்கும் வீட்டிலே தனியான நிம்மதி. வார இறுதியில் வீட்டுக்கு வந்துவிட்டாலோ... உணர்ச்சிப்போராட்டம், பெருமூச்சு.

வீட்டில் இருக்கும் நான்கு சகோதரிகளும் வயது வந்தவர்கள். தம்பிமார் பள்ளிக்குப் போகும் சிறுவர்கள்.

எனது 'வாழ்வு' பற்றி ஐயா சிந்திக்காமல் இல்லை. எனது வருமானம் முழுவதையும் சீட்டுகளில் புதைத்து வளர்த்தெடுத்துவருகிறார். வளர்ச்சி போதாதோ அல்லது ஐயாவின் கூற்றுப்படி ஏழில் செவ்வாய் குறுக்கே நிற்கிறதோ என்னவோ? நாலைந்து மாதங்களாக ஐயாவிலே ஒரு தெம்பு...

"இப்பிடியே விட்டிட்டு இருக்க ஏலாது... அட்டியல் செய்து போடவேணும்"

மூத்து வீட்டு சீட்டுக்காசில் அட்டியலும் ஒரு சோடி காப்பும். "நல்ல சீலையாப் பார்த்து ரெண்டு எடுத்துவை" ஒரு மாதத்தின் பின் இது.

வேண்டியாயிற்று. சீலை, சட்டை, நகை நட்டு எல்லாம் தயார். பணத்தைக் கையிலே திரட்டுவதற்காக ஓடித்திரிகின்றார் ஐயா. எனக்கும் ஒரு நம்பிக்கையின் ஒளி. எனக்கென்று வேண்டியவற்றை சகோதரிகளும் போட்டுப் போட்டு அழகு பார்ப்பார்கள் காணக்காண எனக்கு மகிழ்ச்சியாக இருக்கும்.

என்னை அடுத்துப் பிறந்தவள் வசந்தி, நான் இருக்கும் வீட்டுக்கு அடிக்கடி வந்து போவாள். அவளுக்கும் வீட்டில் இருக்க மனப்போராட்டமாக இருந்திருக்கும். நிம்மதி தேடி என்னுடன் வந்து தங்கியிருப்பாள். அவளும் என்னைப் போல்தான் பெருமூச்சு மட்டும் தான் விட்டு வாழ்கிறாள்.

ஐயாவும் எனக்கு மாப்பிள்ளைதேடி அலைகிறார். விளைவு? கானல் நீரை பாத்திரத்தில் நிரப்பும் முயற்சியோ? என் நெஞ்சிலே கட்டி நிமிர்த்திய நம்பிக்கைக் கோபுரம் காலத்

இம்மாத பரிசுக் கதை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தின் சிதைவிலே இடிந்து விழுந்து விடுமோ? ஏக்கங்கள் என் இதயத்திலே விழுது பரப்பியபோதுதான்... தவணை விடுமுறையில் நான் வீட்டில் வந்து நின்றபோதுதான்...

நான் தங்கியிருந்த வீட்டுக்கார அம்மா எனது வீட்டுக்கு வந்திருந்தாள், திண்ணையில் ஐயா அமர்ந்திருந்து கதைத்துக்கொண்டிருக்கிறார். நான் முகம் மலர்ந்து வரவேற்று வீட்டு உள் வீட்டுக்குள் வந்து விட்டேன். சகோதரிகளும் அங்குமிங்குமாக ஒளிந்திருக்கிறார்கள். ஐயா யாருடனும் கதைத்துக்கொண்டிருக்கும் போது முன்னால் நாங்கள் வரக் கூடாது. இது அவர் வைத்த சட்டம்.

கதை தொடர்கிறது.

"நான் உங்கட வீடுதேடி வந்ததுக்கு ஒரு விஷயம் இருக்கு... ம்... நீங்க குடுத்து வைச்சனீங்க இப்படிப்பட்ட பிள்ளையள் கிடைக்க குடுத்துவச்சிருக்க வேணும்."

குசினிக்குள் அம்மா போட்டு முடித்த தேநீரை வாங்கிவரப் புறப்பட்ட நான் ஐயாவின் முகத்தைப் பார்க்கிறேன். பெருமிதத்தில் மலர்ந்திருக்கிறது. இப்படி ஒரு மலர்ச்சியை அவர் முகத்தில் முன் எப்போதுமே நான் கண்டதில்லை.

தேநீரோடு வருகிறேன்.

"என்ர மகன் எனக்கு ஒரே பிள்ளை கொழும்பிலை உத்தியோகம். எனக்குக் காசு பணம் பெரிசில்லை. வீட்டுக்கு நல்ல மருமகள்தான் வேணும்.'

இப்போது என் முகத்திலே மலர்ச்சி. எனக்கு எல்லாம் புரிந்து விட்டது. என்னைப் பெண்கேட்டுத்தான் வந்திருக்கிறார்கள். மனதிலே மின்னவிட்ட மகிழ்ச்சியால் முகம் நாணத்தில் சிலிர்த்துச் சிவக்கிறது. ஐயாவுக்கும் மகிழ்ச்சி தாங்க முடியவில்லை. குசினிக்குள் இருந்து வந்த அம்மா தான் வந்து தாங்கிக் கொண்டாள். துன்பமோ, இன்பமோ ஐயாவால் தாங்க முடியாதவற்றை அவள்தான் தாங்குவது வழக்கம்.

"காதல் கீதலா..." ஐயாவின் வார்த்தைகள் நடுங்குகின்றன. பெருமிதத்திலே தேய்வு. எவ்வளவுதான் துன்பத்தில் ஆழ்ந்தாலும் இது போன்ற விசயங்களை ஏனோ அவரால் சீரணிக்க முடிவதில்லை.

"இல்லை...இல்லை... அப்பிடி ஏதுமென்றால் நானே அதை அறுத்திருப்பேன். இல்லாததால்தான் வீடுதேடி வந்திருக்கிறேன்."

பதிலால் எல்லோருக்கும் நிம்மதி. எனக்கு? சிரிப்புத்தான் வருகிறது. கூறியது உண்மையா? அவர் கொழும்பிலிருந்து விடுமுறையில் வீட்டுக்கு வரும்போதெல்லாம்

# அழைப்பு



ஊடாடி

ஆறுதல் வார்த்தைகள் கூறவே வாருங்கள்
அழிவினைப் பார்த்திட வாருங்கள்—இங்கு
சீறியே சினந்திட்ட சூழு வளியினால்
சிதைந்திட்ட ஊர்களைப் பாருங்கள்!
கூறவே முடியாத துயரினில் வாடிடும்
கூட்டாளி மார்களைப் பாருங்கள்—அவர்
தேறிட ஒருவழி செய்திட ஓடியே
தேசாபி மானிகாள் வாருங்கள்!

வீதியில் தாய்க்குலம் வீடின்றி அலைந்திடும்
விதியதன் கொடுமையைப் பாருங்கள்—எங்கள்
கோதறும் குழந்தைகள் குளிரினில் உறைந்திடும்
கொடுமையைத் தீர்த்திட வாருங்கள்!
சோதரர் கண்முன்னே சுவரினுள் மடியுண்டு
துடித்திட்ட கதைபல கேளுங்கள்—இங்கு
வேதனைத் தீயினில் வெந்திடும் தமிழ்மக்கள்
விழிநீரைத் துடைத்திட வாருங்கள்!

பசுமையாய்த் திகழ்ந்திட்ட மட்டுமா நகரத்தின்
பாழ்பட்ட நிலையினைப் பாருங்கள்!—எங்கும்
விசும்பல் ஒலியுடன் விழிவெள்ளம் பாய்கின்ற
வேதனை நரகினைப் பாருங்கள்!
உசும்பாது விண்நோக்கி உயர்ந்திட்ட கூடங்கள்
உருக்குலைந் திட்டதைப் பாருங்கள்—விழி
கசிந்திடும் நிலைபோக்க கண்டிடத் தமிழீழம்
கைகொடுத் துதவிட வாருங்கள்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நான் பார்த்திருக்கிறேன்: அவரது கம்பீரம், சாந்தக் கவர்ச்சி, இனிமையான சுபாவம். நான் நினைத்து நினைத்து உள்ளூரக் காதலித்திருக்கிறேன். அதைப்போல் அவரும் உள்ளூரக் காதலித்திருக்கிறார்.

அதன் விளைவுதான் இந்த இனிய வரவும் இனிய செய்தியும். சீதனம் வாங்கும் எண்ணத்தினால் போலும் பூசி மெழுகுகிறார்கள்.

"என்ர அவர் சும்மா போகயில்லை. ஏராளம் சொத்தைத் தந்திட்டுத்தான் போயிருக்கிறார். சீதனம் எனக்கு முக்கியமில்லை... வீட்டுக்கு நிறைஞ்ச மகாலட்சுமிதான்...'

என் எதிர்கால மாமியை நினைக்க எனக்கு பெருமையாக இருந்தது. நான் கொடுத்து வைத்தவள்தான்.

ஐயாவுக்கு அது கௌரவமாகப்படவில்லைப் போலும். "இருந்தாலும்..." என்று இழுத்தார்.

"அதுதான் சீதனமில்லாமல் மருமகளை எடுத்தாலும் என்ர மகனுக்குக் கௌரவமில்லை..."

எனக்கு வியப்பாகவும் தாங்கமுடியாத கவலையாகவும் இருந்தன. சூழ் நிலைகளும் விருப்பமும் சீதனத்தைப் புறக்கணித்தாலும் பாழாய்ப்போன கௌரவம் அதை விடாது போலும். நான் ஒன்றுமில்லாமலே கரையேறிவிட்டால் என் சீதனப்பணத்தில் அடுத்ததாகத் தலை நீட்டக்காத்திருக்கும் தங்கை வசந்தியை வாழவைக்கலாமே... அதற்குக் கூட பாழாய்ப்போன கௌரவம் குறுக்கே நிற்கிறதே... எப்படியோ என் வாழ்வாவது... பூரிப்போடு திரும்புகிறேன்.

என் நெஞ்சத்திலே இடி விழுமென்று எதிர்பார்த்திருப்பேனா?

"உங்க இரண்டாவது மகளை என் மனசுக்கு பிடிச்சுப் போச்சு,"

இடி என் நெஞ்சில் மட்டுமல்ல — வீட்டிலிருந்த அனைவரின் நெஞ்சிலும்தான் விழுந்தது. யார்தான் இப்படி எதிர்பார்த்தார்கள்?

"என்ன சொல்றீங்க" ஐயாவின் கேள்வியில் சோகத்தின் கனம்.

"உங்க இரண்டாவது மகள் வீட்டுக்கு வந்து போன நாட்களிலை என்ர மனசில நிலையாக இடம் பிடிச்சிட்டாள்... அதை நிரந்தரமாக்க நீங்கதான்...."


சுடர்

CHUDAR

## மாதம் ஒரு சிறுகதைக்கு பரிசு!

எழுத்தாளர்களை ஊக்குவிக்குமுகமாக ஒவ்வொரு மாதமும் சிறந்த ஒரு சிறுகதையை தேர்ந்தெடுத்து பரிசளிக்கும் திட்டம் ஒன்றினை செயற்படுத்தவிருக்கிறோம்.

சிறந்த சிறுகதை என நாம் தேர்ந்தெடுக்கும் கதைக்கு ரூபா 25 பரிசாக வழங்கப்படும். ஒவ்வொரு மாதமும் இப்பரிசு வழங்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறோம்.

சிறுகதைகளை அனுப்ப வேண்டிய முகவரி:

ஆசிரியர்,
சுடர்
194 ஏ, பண்டாரநாயக்க வீதி
கொழும்பு—12.


அடித்துப் போடப்பட்டவள் போல்தான் உள் வீட்டுக்குள் கட்டிலில் சரிந்தேன். கணப்பொழுதில் கட்டியெழுப்பிய அந்த மாளிகை கண்ணெதிரே உடைந்து கொட்டுண்டதுபோல் ஒரு தவிப்பு.

"எல்லாவற்றையும் கேட்டுக்கொண்டிருந்திருப்பாய்...... உன்னைவிட எனக்கு வேதனை. இதில உன்ர முடிவுதான் முடிவு."

என்னுடைய முடிவுதான் நான் இன்னமும் வாழாத குமர் என்பதைவிட வசந்திக்கு அக்கா என்பதுதான் முதலில் பிறந்தது. நிரந்தரமானது. முகத்திலே துளிர்த்திருந்த வியர்வையைத் துடைப்பது போல் பாவனை காட்டி படிந்திருந்த சோகத்தைத் துடைத்தபடி எழுகின்றேன்.

என்னுடைய முடிவு?

"ஐயா தங்கச்சியின்ர கலியாண ஒழுங்கைப் பாருங்க."

"மகளே...."

"ஐயா... இப்படி ஒரு நல்ல சம்பந்தத்தைத் தவறவிடலாமா...... அதுவும் மாப்பிள்ளைக்கு ஊர்முழுவதும் அல்லாடுகிற இந்தக் காலத்திலை...நான் முதலே சொல்லத்தான் நினைச்சேன். உழைக்கிற நான் முதலை போயிட்டால் தங்கச்சிமாற்றை கதி..."

ஐயாவின் முகத்திலே மகிழ்ச்சியை மீட்டெடுப்பதற்காகவே கூறினேன். இன்பத்தையும் துன்பத்தையும் பேதமறிய முடியாதபடி அவரது முகம் இறுகிப்போய் இருந்தது. தங்கச்சி வசந்தி காதருகே மறுக்கிறாள். அவளைச் சமாதானப்படுத்துவது பெரிதல்ல. 'இரு' என்றால் இருந்துவிடுவாள்.

அம்மா?

அவளைச் சமாதானப் படுத்தவே முடியாது. என் உள்ளம் ஒன்றையே கண் எதிரே பிடித்துக்கொண்டு கலங்குவாள். அந்தத் துயரத்தின் விளைவாகத்தான் அம்மா வீட்டுக்குள் இருக்கும் கடவுள் படத்துக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முன்னால் சிணுங்கிக்கொண்டிருக்கிறாள்.

ஐயா வெளியே போய் சம்மதம் தெரிவிக்கிறார். அவசர அவசரமாக திருமணப்பதிவுக்கான ஆயத்தங்கள் நிறைவேறின.

அந்த நாளும் வந்தது.

முற்றத்தில் மேசையும் இரண்டு கதிரைகளும் இருக்கின்றன. அதில் ஒரு கதிரையில் நான் அமர்வது போலவும் என் எதிர்காலக் கணவர் மறு கதிரையில்... அவர் எப்படி இருப்பார்? கற்பனை பண்ணிப் பண்ணிப்பார்க்கிறேன். என் கண்ணிலே அந்தக் கற்பனை வடிவம் பூத்து விரிகின்றபோது கண்ணீர்த்திரை விழுகிறது. அந்த உருவம் என்றுமே எனக்குக் கிட்டாத பொருளோ?

உறவினர்கள் தங்கள் தங்கள் கருமங்களில் கண்ணாயிருக்கிறார்கள். ஐயா கப்பல் கவிழ்ந்துவிட்டதுபோல் கலக்கத்துடன் இருந்தாலும் அதை வெளிக்காட்டாமல் மறைக்க முயன்று கொண்டிருக்கிறார். அம்மாவால் அது முடியவில்லை. கண்ணீர் வழிந்து கன்னத்தில் காய்ந்து வாய்க்கால் கட்டி இருக்கிறது. தம்பிமார்கள் கல்யாண வீட்டுக்களையில் உற்சாகத்தில் ஆழ்ந்திருந்தாலும் அடிக்கடி அவர்கள் என்னைப் பார்க்கும் ஏக்கப்பார்வை என்னை உயிரோடு கொல்கிறது.

அயல் வீட்டுப் பெண்களோடு சேர்ந்து நானும் தங்கச்சி வசந்தியை அலங்கரிப்பதில் மூழ்குகிறேன். எனக்கென்று வாங்கிய அட்டியல், காப்பு, சீலை எல்லாம் வசந்தியின் உடலில் ஏறி...... அவள் மகாலட்சுமிதான். தாழ்வு உணர்ச்சி என் பெண் உள்ளத்தைக் கசக்குகிறது.

மாப்பிள்ளை அழைப்பும் முடிந்துவிட்டது. முற்றத்தில் மேசையின் முன்னால் மாப்பிள்ளை அமர்ந்திருக்கிறார். பக்கத்தில் நான் அமரவேண்டிய இடத்தில் தங்கை. விறைப்புடன் வெறுமையாக இருக்கும் கதிரையைப் பார்க்கிறேன். இந்த நேரத்திலா அம்மா காணவேண்டும் முகத்தை விறுக்கென்று வெட்டி குலுங்கிக்கொண்டே ஒதுக்குப்புறம் போகிறாள்.

"அம்மா..."

"இதைப் பார்த்த பிறகும் உயிரோட இருக்கிறனே பாவி"

தலையில் அடித்துக்கொள்ளும் அம்மாவின் கைகளைப் பற்றுகிறேன். பற்றுக்கோல் ஆகின்றேன்,

என்னுடைய எல்லாவற்றையும் சுமந்துகொண்டு எனக்குப்



பதிலாக தங்கை வசந்தி அமர்ந்திருக்கிறாள். கண்ணீர்ப் பூக்களைச் சிந்திக்கொண்டு நான் மகிழ்ச்சியுடன் சிரிக்கிறேன். இன்பமும் துன்பமும் இல்லாத உணர்ச்சிப்போராட்டம். திருமணப்பதிவை தொடர்ந்து அதே மனப்புயல்களை எல்லாரிடமும் வீச வைத்து அடுத்த மாதத்திலேயே திருமணமும் முடிந்தது.

நான் பள்ளிக்கூடத்துக்குப் புறப்பட ஆயத்தமானேன்.

"தங்கச்சி வாழப் போன இடத்திலேயே நீயும் இருக்கிறது..." பெண் உள்ளத்தைப் புரிந்து வைத்திருப்பவள்— அம்மா கூறுகிறாள்.

"இல்லை... புது இடத்திலை தான்..."

புறப்படுவதற்கு ஆயத்தமாகி விட்டேன்.

"இனியும் எப்படி..." ஐயா வார்த்தைகளை நீட்டி இழுக்கிறார். அவரது கேள்வியிலும் அர்த்தம் இருக்கிறது. இனியும் எந்த முகத்தோடு மக்கள் மத்தியிலே இறங்கி பள்ளிக்கூடத்துக்குப் போவது என்று என் உள்ளத்தில் எழுந்த கேள்விதான் அவரிடமும் பிறந்திருக்கிறது. அதற்காகப் பார்த்தால்...

"அடுத்த தங்கச்சிக்கு இப்ப இருந்தே காசு சேர்க்க வேணுமா?" என்று விட்டு முற்றத்தில் இறங்குகிறேன். படலையடிக்கு வரும் வரைக்கும் வீட்டிலுள்ளவர்களின் இதயக் குமுறல்கள் என் காதினுள்ளும் எதிரொலிக்கின்றன,

வீதியில் இறங்கிய நான் நிமிர்ந்துதான் நடக்கிறேன். ஒரு கல்யாணத்துக்கே தலை குனிந்துவிட்டால் எப்படி? இதைப்போல இன்னும் மூன்று கல்யாணங்களைக் காண வேண்டியவளல்லவா நான்!

(யாவும் கற்பனை)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மேடை

## திரு. ஈழவேந்தன்—

இயக்கப் பணியில், அசுரவேகத்தில்
செயற்படுகிற ஒரு சிலரில் திரு. ஈழவேந்தன்
குறிப்பிடத்தக்கவர். ஒரு சராசரி பாராளு,
மன்ற உறுப்பினரை விட ஈழவேந்தன் அவர்
களது பணி அளவாலும் தரத்தாலும் எவ்
வளவோ உயர்வானது. அரசியல் மேடையில்
மட்டும் அல்ல, சமய, இலக்கிய மேடைகளி
லும் அவரது குரல் அடிக்கடி தமிழ் ஈழத்தில்
ஒலிக்கிறது. மலைநாடும் தலைநகரும் விதிவிலக்
கல்ல. தமிழ் ஈழக் கோரிக்கைக்கு உருவும்,
வலிவும், வனப்பும் கொடுத்து—கொடுத்து
வருகின்ற ஒரு சில இயக்க தலைவர்களில்
ஈழவேந்தன் முன்னணியில் நிற்கிறார். இவ்வள
விற்கும் அவர் ஒரு 'முழுநேர' அரச ஊழியர்.
திரு. ஈழவேந்தனைப் போல் இன்னும் ஒரு
பத்துப்பேர் இருந்தால், பத்து வருடத்தில்
கிடைக்கக் கூடிய ஈழம் நிச்சயமாக ஐந்து
வருடத்தில் கிடைத்துவிடும்.

## இணைப்பு மொழி—

திரு. ஈழவேந்தனைப் பற்றி இவ்வளவு
உயர்வாகச் சொல்லி விட்டு அவர் அண்மை
யில் கூறிய கருத்தொன்றினை மறுப்பது
மனதுக்குச் சிறிது கஷ்டமாக இருந்தாலும்
அதைக் கூறியே ஆகவேண்டிய அவசியம்
நேர்ந்துள்ளது. திரு. ஈழவேந்தன் இணைப்பு
மொழியாகச் சிங்களம் தமிழ்ப் பாடசாலை
களில் படிப்பிப்பதைக் கூட்டணி வெற்றிகர
மாக எதிர்த்து வந்துள்ளதாகக் கருத்து
வெளியிட்டிருக்கிறார். இணைப்பு மொழியாக
சிங்களத்தைத் தமிழ் பிள்ளைகளின் தொண்
டைக்குள் திணிப்பதை எதிர்த்து வெற்றி
கண்டது உண்மையா? வட மாகாணத்தை,
அதிலும் குடா நாட்டில் சிங்களத் திணிப்பை
எதிர்த்து வெற்றி கண்டது உண்மையாக
இருக்கலாம். (அங்கும் ஒன்றல்ல, ஐந்து சிங்
களப் பௌத்த பாடசாலைகள் தமிழ்ப் பிள்ளை
களுக்கு வெற்றிகரமாக நடத்தப்படுகிறது)
கிழக்கு மாகாணத்தைப் பொறுத்த அளவில்
இந்தச் சிங்கள மொழித் திணிப்பு எதிர்ப்பு
படு தோல்வி. இன்று நேற்றல்ல, கடந்த
பத்து வருடங்களாக நகர கிராமப் புறப்
பள்ளிக்கூடங்கள் எல்லாவற்றிலும் சிங்களம்
படிப்பிக்கப்படுகிறது. கடைசிச் சேதி, தலை
நகரில் பம்பலப்பிட்டி இந்துக் கல்லூரியில்
கூட இப்பொழுது சிங்களம் படிப்பிக்கத்
தொடங்கி விட்டார்கள். எங்களுடைய
பலத்தை மட்டும் அல்ல, பலவீனத்தையும்
தெரிந்து வைத்திருப்பது நல்லது. நண்பர்
ஈழவேந்தன் இதற்கு என்ன சொல்லுகிறார்?

## தமிழனது சந்தை விலை—

சிங்கள அரசியல் வாதிகளிடம்—அவர்
கள் எந்தக் கட்சியைச் சேர்ந்தவர்களாக
இருந்தாலும் சரி—தமிழர்களை விலைக்கு வாங்
கிப் போடலாம் என்ற ஒரு அபிப்பிராயம்
இலங்கை சுதந்திரம் பெற்ற காலம் தொட்டு
வேரூன்றி இருக்கிறது. கொடுக்க வேண்டிய
விலை ஆட்களைப் பொறுத்துக் கூடிக் குறைய
லாம். ஆனால் எப்படியும் அவர்களை விலைக்கு
வாங்கலாம் என்பது அவர்களது அசைக்க
முடியாத நம்பிக்கை. ஒரு சிங்கள அரசியல்
வாதி—சேர். ஜோன். கொத்தலாவலை என்று
நினைக்கிறேன்—"ஒரு தமிழனை, ஒரு கோப்பை
தேநீருக்கும், ஒரு சுருட்டுக்கும் வாங்கி விட
முடியும்" என்று சொல்லியதாகக் கேள்வி.
இதை நிரூபிப்பது போலவே எமது கடந்த
கால வரலாறு இருந்து வந்திருக்கிறது. லேட்
டஸ்டாக விலை போனவர்கள் தான் திருவா
ளர்கள் தொண்டமான், கனகரத்தினம், சத்
தியேந்திரா, மாணிக்கவாசகர் போன்றோர்.
தொண்டமானுக்கு விலை முழுமந்திரிப் பதவி.
கனகரத்தினம் = அரை மந்திரி. சத்தியேந்
திரா=அமைச்சுச் செயலாளர். மாணிக்கவா
சகர்=பல்கலைக்கழக வேந்தர். இதை விட
சமாதான நீதவான், மரணவிசாரணை அதி
காரி, கூட்டுத்தாபனப் பணிப்பாளர் போன்ற
பதவிகளுக்கும் விலை போகிற தமிழர்களும்
இருக்கிறார்கள்;

## சமாதான நீதிவான்—

முன்னைய அரசின் ஆட்சிக் காலத்தில்
சமாதான நீதிவான்பட்டம் பெற்ற சிலர்
தங்கள் பதவிகளைத் துறந்தார்கள். சிங்கள
ஏகாதிபத்திய அரசால் வழங்கப்படும் பதவி
களை ஏற்பது சுதந்திரத்துக்காகப் போராடு
கிற மக்களுக்கு இழிவு என்பதே பதவி துறப்
புக்கு முக்கிய காரணம். ஆனால் இன்று
பழையபடி வேதாளம் முருக்க மரத்தில் ஏறி
விட்டது. ஜே. பி. பட்டமளிப்பு, விழாக்களில்
கூட்டணி பா. உக். களே படத்துக்கு 'போஸ்'
கொடுக்கிறார்கள். இதைப்பார்த்து வெட்கப்
படுவதா அல்லது துக்கப்படுவதா என்று
தெரியவில்லை. ஒன்று மட்டும் புரிகிறது. தமிழ்
ஈழ விடுதலைப் போராட்டத்தில் பல பா. உக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கள் இதய பூர்வமாக செயல்படுகிறார்கள் இல்லையென்பதுதான் அது.

## மௌன விரதம்—

பாராளுமன்றத்தில் பல கூட்டணி பா. உ.க்கள் மௌன விரதம் அனுட்டித்து வருவதைவிட்டு சென்ற 'மேடை'யில் குறிப்பிட்டிருந்தேன். மௌனமாக இருந்தால் கூட பரவாயில்லை, வாயைத் திறந்தால் 'விசர்க் கதை' கதைக்கிறார்கள் என்று ஒரு வாசகர் எழுதியிருக்கிறார். உதாரணமாக வரவு—செலவுத்திட்ட விவாதத்தில் சிராவஸ்தி சாப்பாடு மோசம் என்று ஒரு பா. உ. பேசியிருந்தார். இதைப் பத்திரிகையில் படித்தவர்களுக்கு இந்த பா. உ.வுக்கு வீட்டில் அவரது மனைவி நல்ல சாப்பாடு போடுகிறாரில்லை என்று தான் யாரும் பொதுவாக நினைப்பார்கள். அது மட்டுமல்ல இந்த, பா. உ. பெரிய சாப்பாட்டு இராமனாக இருப்பாரோ என்று கூட சிலர் நினைக்கக்கூடும். இந்த பா. உ. சிறையில் மரச் சட்டியில் கல்லுச் சோறும், புழுத்த இறைச்சித்துண்டுகளையும் சாப்பிட்டு உயிரை உடலோடு வைத்திருக்க போராட்டம் நடத்தும் கவிஞர் காசி, மாவை மற்றும் இளைஞர்களின் நிலையை ஒரு கணம்கூட நினைத்திருந்தால் சிராவஸ்தி சாப்பாட்டைப் பற்றி மூச்சு விட்டிருக்கமாட்டார். இதே பா. உ., பா. உ.க்களது பிள்ளைகளுக்கும் புகையிரத ஆணைச்சீட்டு கொடுக்கப்படவேண்டுமென்றும் பாராளுமன்றத்தில் அழுதிருக்கிறார்!

## வீட்டில் தர்மம்—

தர்மம் முதலில் தனது வீட்டிலிருந்து ஆரம்பிக்கப்படவேண்டுமென்பது பழமொழி. இங்கிலாந்து, அமெரிக்கா, ஜெர்மனி, பிரான்ஸ் போன்ற நாடுகளில் இன்று தமிழ் ஈழப் பிரசாரம் முடுக்கிவிடப்பட்டிருக்கிறது. தலைவர் அமிர்தலிங்கம் அவர்களுடைய வெளிநாட்டுப் பயணம் இந்தப் பிரசார யுத்தத்துக்கு மேலும் உந்துசக்தியாக அமைந்துவிட்டது. ஆனால் அண்டை நாடான தமிழ் நாட்டில் எமது பிரசாரம் தொய்ந்து போய் விட்டது. தனிப்பட்ட இரண்டொருவர் எமக்காக குரல் கொடுத்தார்கள். அவர்களையும் இப்போது காணவில்லை. தமிழ் நாட்டில் எமக்கான பிரசாரம் தாபனரீதியாக திட்டமிட்டு நடத்தப்படவேண்டும். இதற்கான ஒழுங்குகளை திரு. அமிர்தலிங்கம் தனது இந்திய சுற்றுப்பயணத்தின்போது மேற்கொள்ளவேண்டும்.

## உள்ளூராட்சி தேர்தல்—

உள்ளூராட்சி தேர்தல்களை ஆட்சியிலிருக்கும் யூ. என். பி. சந்திக்க தயங்குகிறதா? இந்தக் கேள்விக்கு 'ஆம்' என்று நிச்சயமாக பதில் சொல்லிவிடலாம். விலைவாசி, வேலையில்லாத்திண்டாட்டம் இவை வளர்ந்து கொண்டு போகிறதேயொழிய துளியும் குறையக் காணோம். குறிப்பாக யூ. என். பி.யை பெருமளவு ஆதரிக்கும் மத்தியதர வர்க்கம் இன்று கசக்கிப் பிழியப்படுவதால் ஆட்சியாளர் மீது அந்த வர்க்கத்தின் வெறுப்பு உச்சக்கட்டத்தை அடைந்துள்ளது, இந்த லட்சணத்தில் உள்ளூராட்சி தேர்தல்களில் ஆளும் கட்சி மண் கவ்வுவது தவிர்க்க முடியாத நிகழ்ச்சியாக இருக்கப்போகிறது. நிற்க, எக்காரணம் கொண்டும் மேலும் ஒத்திப் போடப்படுவதற்கு கூட்டணித் தலைமைப் பீடம் தொடர்ந்து தலையாட்டிக்கொண்டிருக்காது என்று நம்புகிறோம்.

## சாணக்கியம்—

அதி உத்தம ஜனாதிபதி ஒரு பெரிய சாணக்கியர் என்பது எல்லோரும் அறிந்த—ஒத்துக்கொண்ட விடயம். சுதந்திரக் கட்சி அரசு முட்டாள்தனமாக செய்த காரியங்களை, யூ. என். பி. அரசு மிக நாகரீகமாக அதே காரியங்களை நிறைவேற்றுகிறது. உதாரணமாக சு. கட்சி அரசு அவசரகாலச் சட்டங்களின் துணை கொண்டு தமிழ் இளைஞர்களை காராக்கிரகத்தில் பிடித்துத்தள்ளியது. அதே கைங்கரியத்தை யூ. என். பி. முறையாக நிறைவேற்றப்பட்ட சட்டங்களின் துணை கொண்டு சாதிக்கிறது.

## திருமலை—

'திருமலைக்கு ஆபத்து' என்ற எச்சரிக்கைக் குரல் கடந்த 20—25 வருடங்களுக்கு முன்பே தமிழ்த் தலைவர்களது கவனத்திற்கு கொண்டுவரப்பட்டது. ஆனால் உருப்படியாக ஒன்றும் நடைபெறவில்லை. சிங்களக் குடியேற்றம் தங்கு தடையின்றி தொடர்ந்தும் நடைபெறுகிறது. 'திருமலைக்கு ஆபத்து' என்ற கட்டம் தாண்டி 'திருமலை பறிபோய் விட்ட'தென்ற கட்டத்துக்கு இன்று வந்து விட்டோம். 20 வருடங்களுக்குமுன் திருமலைக் கச்சேரியில் மாவட்ட காணி அதிகாரி பதவியை மட்டும் ஒரு சிங்களவர் வகித்தார். இன்றோ அரசாங்க அதிபர் தொடங்கி சுருக்கெழுத்தாளர் வரை எல்லாப் பதவிகளுமே சிங்களவர்களால் நிரப்பப்பட்டுவிட்டது. அது மட்டுமல்ல அப்போதில்லாத பல புரங்கள் இப்போது முளைத்துவிட்டன. 'ஸ்ரீமாபுர' 'அபயபுர' 'அக்போபுர'... இப்படி எத்தனையோ புரங்கள். கடைசியாக ஆட்டைக் கடித்து, மாட்டைக்கடித்து மனிதனையும் கடித்ததுபோல, கோணேஸ்வரருக்கே ஆபத்து வந்து விட்டது. கோணேஸ்வரர் குடிகொண்டிருக்கும் இடத்தில் ஒரு புத்த கோயில் இருந்ததாக பிக்கு ஒருவர் பச்சைக்கொடி காட்டுகிறார். இனி அடுத்த கட்டமாக புதைபொருள் ஆராய்ச்சித் திணைக்களம் இரண்டு—மூன்று இடங்களை அகழ்ந்துவிட்டு அதற்குள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு யோசனை: **பேருந்து நடத்துநரும் இனிப்பும்**

இலங்கையிலே—முக்கியமாகக் கொழும்பிலே—திடீரென பத்து, ஐந்து சத நாணயங்கள் மாயமாகிவிட்டன. இதன் காரணமாகப் பலசரக்குக் கடைகள், தேநீர்ச் சாலைகள் போன்றவற்றில் மிகுதியாகத் தரப்படவேண்டிய பணம் இருபத்தைந்து சதத்திலும் குறைவானதாகவிருப்பின் அதற்குப் பதிலாக இனிப்புகள், தரப்படுகின்றன. கொழும்பிலுள்ள பிரபல சைவவுணவுச் சாலையான 'கிறீன்லன்ட்ஸ்'இற் கூட அவ்வாறு செய்யப்படுகின்றது. ஆனால், பேருந்துகளிலோ நிலைமை மோசமாகவுள்ளது, பயணிகளும் நடத்துநரும் வீணைகச் சண்டைபோடுவதும் வாக்குவாதப்படுவதும். மிகுதிப் பணத்தைப் பெற்றுவிடவேண்டும் என்ற துடிப்பில் அனைவரும் ஏறுகின்ற வாசலிலேயே நடத்துநரின் கையை நோக்கிய வண்ணம் குவிந்து நிற்பதும் வழக்கமாகி விட்டது. இந்நிலைமையைப் போக்க ஒரு யோசனை: 'ஒவ்வொரு நடத்துநரும் தன்னோடு ஒரு இனிப்புப் பொதியைச் சுமந்து செல்லல் நன்று.'

சில பயணிகள், ஏறியவுடன் "மிகுதிதரச் சில்லறை உண்டா?" என்று கேட்டுவிட்டு நடத்துநரின் பதில் 'இல்லை' என அமையின் தம்மாற் சீட்டினை பெற முடியாதெனக் கூறிவிட்டு, ஓசிப் பயணமும் செய்கின்றனர்.

க. இராஜமனோகரன்

---

இருந்து நாலு புத்தர் சிலைகளை எடுக்கவேண்டியதுதான் மிச்சம்.

## தேவாரத்துக்கு தடை

சோழ மன்னர்களது கொடி புலிக்கொடி என்பது வரலாறு. ஆனால் இனி வரலாற்று உண்மையைக்கூட சொல்ல முடியாது என்று சிங்கள ஏகாதிபத்தியம் தடை போட்டு விட்டது. இதுகூட பரவாயில்லை என்று நினைக்குமாறு தெய்வத் தேவாரங்களுக்கே 'ஆபத்து' வந்து விட்டது. தலைநகரில் ஒரு பிரபல கல்லூரியில், 'பொன்னார்மேனியனே புலித்தோலையரைக் கசைத்து' என்ற சுந்தரர் தேவாரத்துக்கு தடையாம்! புலியென்றால் அவ்வளவு கிலியா?

## தமிழ் முதலாளிகள்—

புயல் நிவாரணப்பணிக்கு சிங்கள முதலாளிகள் தாராளமாக உதவியிருக்கிறார்கள். பொலநறுவை மாவட்டத்தில் தாசா முதலாளி, ரத்தினலோக முதலாளி போன்றோர் தலைக்கு ஐந்துலட்சத்துக்குமேல் பொருளாகவும்பண்டமாகவும் கொடுத்து உதவியதாக அந்த மாவட்ட மந்திரி பாராட்டிப் பேசியிருக்கிறார். இதே நேரத்தில் தமிழ் முதலாளிகள் மட்டக்களப்பு மாவட்டத்தில் ஆயிரக் கணக்கில் செலவழித்ததாகக்கூடத் தெரியவில்லை. தெரித்தால் சொல்லுங்கள்.

## யாழ் மாநகர சபை—

யாழ். மாநகர சபை விசேட ஆணையாளர் பத்திரிகை விளம்பரத்திலேயே காலம் கழிக்கிறார். அவரது லேட்டஸ்ற் 'ஸ்ரண்ட்': முச்சந்திகளில் நீர்ச்சுனைகள் நிறுவப்போகிறாராம். வரியிறுப்பாளர்களுக்கு நல்ல குடிநீர் வசதி இல்லை. ஒரு நாளைக்கு பத்துமுறை மின்சாரம் தடைப்படுகிறது. தெரு விளக்குகள் கண்ணை மூடுவோமா — விடுவோமா என்று யோசிக்கின்றன. வீதிகள் குண்டும்—குழியுமாக காட்சியளிக்கின்றன. வீதி துப்புரவு வாரக்கணக்கிலும் நடைபெறுவதாக இல்லை. குப்பை வீதியில் கிடந்து 'உக்கி' நல்ல பசளையாக மாறுகிறது. இந்த இலட்சணத்தில் முச்சந்திகளில் நீர்ச்சுனைகள் இல்லாததுதான் குறை.

இப்படித்தான் கொஞ்சக்காலத்துக்கு முன்பு பலத்த பத்திரிகை விளம்பரத்துக்கு மத்தியில் ஒரு 'மினி பீச்' மாநகர சபை அலுவலகத்துக்கு பின்னால் 'திறக்கப்பட்டது' இப்போது அது காலைக்கடன் கழிப்பதற்கு நன்றாக உபயோகப்படுகிறது. பெரிய கடையை மட்டும் மினுக்கினால் போதாது. ஏனைய வட்டாரங்களையும் கவனிக்கவேண்டும்.

## விலை ஏற்றம்—

நான் ஒரு சோதிடன் இல்லை. ஆனால் அரசியல் ஆருடம் சொல்லமுடியும். இந்தப் பகுதியை நீங்கள் படித்துக் கொண்டிருக்கும் பொழுது பெற்றோல் — மண்ணெண்ணெய், டீசல், மா விலை உயர்ந்துவிடும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுடர்
கலை, இலக்கியத்
திங்கள் இதழ்

மாசி—1979.
சுடர் 4—ஒளி—11.

# மீண்டும் தரப்படுத்தல்

பழையபடி வேதாளம் முருக்கமரத்தில் ஏறிவிட்டது!

நடிகர்கள் மாறலாம்—நாடகம் மாறாது என்பதற்கு இன்னொரு எடுத்துக்காட்டு!

தரப்படுத்தலை ஒழிப்போம் என்றார்கள். ஒழித்துவிட்டோம் என்றார்கள். இப்போது மீண்டும் தரப்படுத்தலை முன்னைவிட மோசமாக—இன அடிப்படையில்—புகுத்தப் போகிறார்கள்.

இனரீதியாக 55% திறமை—30% பின்தங்கிய மாவட்டம்—15%.

மந்திரிசபை தீர்மானித்துவிட்டது. அதி உத்தம சனாதிபதி தலையசைத்து விட்டார். மந்திரிசபையில் அங்கம் வகிக்கும் இரண்டு தமிழ் மந்திரிகளும் கோயில் மாடுகள் போல தலையை ஆட்டிவிட்டார்கள்.

சிங்கள அரசின் இந்த முடிவு சிங்கள பேரினவாதிகளுக்கு மாபெரும் வெற்றி!

பகிடி என்னவென்றால் இன அடிப்படையில் பல்கலைக்கழக தெரிவு நடைபெறுவது தேசியவாதமாம்.

பச்சை இனவாதத்துக்கு தேசியவாத முத்திரை குத்துவது இது முதல் தடவையல்ல.

சிங்கள பௌத்த ஏகாதிபத்திய அரசின் பேச்சுத்தான் பல்லக்கேயொழிய—செயல் கால் நடைதான்.

மனித உரிமை
சனநாயகம்
தார்மீகம்

இந்த மாய்மாலங்களுக்கு மட்டும் கொஞ்சமும் பஞ்சமில்லை. பத்திரிகைகள், வானொலியில் ஒவ்வொரு நாளும் வாந்தி எடுக்கப்படுகிறது.

புதிய இனவாத தரப்படுத்தலுக்கு எதிராக தமிழர் விடுதலைக் கூட்டணி தனது ஆட்சேபத்தை தெரிவித்திருக்கிறது.

அதி 'உத்தம' சனாதிபதிக்கு 'பெட்டிசம்'; கல்வி மந்திரிக்கு 'காவடி.'

இந்த ஆட்சேபம்—எதிர்ப்பு போதுமானதல்ல. போதுமானதல்ல மட்டுமல்ல வீண் வேலை.

கல்வி மந்திரி ஏற்கனவே கைவிரித்துவிட்டார். முடிவு தனது முடிவல்ல, அது மந்திரிசபை முடிவென்று சொல்லிவிட்டார். சனாதிபதியும் எதையாவது சொல்லி தட்டிக் கழிப்பார்.

தரப்படுத்தல் எப்படியும் தடுத்து நிறுத்தப்பட வேண்டும்.

தரப்படுத்தலால் 1971ம் ஆண்டு தொடக்கம் 1977ம் ஆண்டுவரை தமிழ் மாணவமணிகளது உயர் கல்வி வாய்ப்பை முந்திய அரசு வெட்டிச் சாய்த்தது.

எனவே மீண்டும் தரப்படுத்தலை அனுமதிப்பது தற்கொலைக்கு ஒப்பானதாகும்.

தரப்படுத்தலுக்கு எதிராக திட்டமிட்ட தொடர்ச்சியான அறப் போராட்டம் பரந்தளவில் மேற்கொள்ளப்படவேண்டும்.

இதன் பொறுப்பை கூட்டணி மட்டுமல்ல, தமிழ் இளைஞர் பேரவை, தமிழ் கல்விமான்கள், தமிழ் மாணவமணிகள் எல்லோரும் ஏற்கவேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாதக்கலண்டர் 1979

... மில்க்வைற் நீலசோப் ... சோப் அல்லது ... அல்லது 10 சல ... உறைகளை ... அனுப்பி ... அழகிய மாதக் கலண்டரைப் பெற்றுக் கொள்ளுங்கள்.

மில்க்வைற்—யாழ்ப்பாணம்
தொலைபேசி 72..3

கிளை:
79, மெசஞ்சர் வீதி,
கொழும்பு 12.
தொலைபேசி: 36063




## "சுடர்" வட்டம்

'சுடர்' வாசகர்கள், ஒருவரோடு ஒருவர் தொடர்பு கொண்டு கலை, இலக்கிய பரிமாற்றங்களை நடத்தி பயன் பெறுவதற்கு வசதியாக 'சுடர் வட்டம்" எனும் பகுதியை ஆரம்பித்திருக்கிறோம்.

இலக்கிய நண்பர்களுடன் தொடர்புகொள்ள விரும்புவோர், தங்கள் முகவரி பொழுது போக்கு விபரங்களை எழுதி, கீழ்க்காணப்படும் முகவரியை வெட்டி அஞ்சலட்டையில் ஒட்டி அனுப்புக.

'சுடர்' வட்டம்
194 ஏ, பண்டாரநாயக வீதி,
கொழும்பு—12.

## 'சுடர்' சந்தா விபரம்

ஆறு திங்கள் — ...-00
ஒரு ஆண்டு — 12-00
இரு ஆண்டுகள் — 24-00
(தபாற்செலவு உட்பட)

சுடரின் சந்தாதாரர்களாக விரும்புவோர் அதற்கான தொகையை காசுக்கட்டளை அல்லது தபாற்கட்டளை மூலம் பின்வரும் விலாசத்திற்கு அனுப்பி பதிவு செய்து கொள்ளுங்கள்.

நிர்வாகி,
194 ஏ, பண்டாரநாயக்க வீதி,
கொழும்பு-12.

ஒவ்வொரு மாதமும் 'சுடர்' ... வெளியிட்டு ...




இச்சஞ்சிகை 194 ஏ, பண்டாரநாயக்க மாவத்தை, கொழும்பு-12ல் உள்ள
சிலோன் நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டாரால் அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org